மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 5 சுற்றம் : 6 சூன் 2017 விலை : ரூ.10/- ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி





# அ.தி.மு.க.வின் நிலை?








திருவண்ணாமலையில் சமூக செயற்பாட்டாளர்கள் கூட்டமைப்பினர், பாரம்பரியத்தை மீட்டெடுப்போம் என்ற தலைப்பில் விழா நடத்தினர். அதில், முற்றம் ஆசிரியர் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly June 2017

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** பி.ஏ.,
**நாராயணன்**
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**ஜான்டேவிட்**
**பெ. அர்ஜுன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே. பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**டி. வி. ரமணி**
**குமார் செங்கல்பட்டு**
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**த. சுஜாதா** பி.காம்., எம்.பி.ஏ.,
V.**கணேஷ்** திருவல்லிக்கேணி
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**

அலுவலக முகவரி
எண் 124, என்.டி.ஆர். தெரு, ரங்கராஜபுரம்,
கோடம்பாக்கம், சென்னை- 600 024
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் வேட்டு வைக்கும் மனுவாதிகள்
– தலையங்கம்.......... 4

அ.தி.மு.க.வின் நிலை?
–வேர்மகள்.......... 5

தமிழனை தலை நிமிர வைத்த தளபதி
பிரிகேடியர் தீபன் .......... 6

டோடோ பறவை.......... 10

ஆனந்தபுரம் ஒரு வீரவரலாறு.......... 11

சிறந்த இந்து யார்? .......... 15

ஏழைகளின் விடிவெள்ளி
காமராசர்.......... 16

சோழநாடு சோறுடைத்தா? சொல்லுடைத்தா?.......... 18

கவிக்கோ அப்துல் ரகுமான் நினைவாக.......... 19

அந்தபுரத்து ராணியும் ஒட்டக் கூத்தரின் பாட்டும்.......... 23

திராவிடர் கழகத்தலைவர் கி. வீரமணி அறிக்கை.......... 25

ஆழகடல் உயிரனங்களுக்கு ஆபத்து
பேரா.கே.ராஜு.......... 28

மண்பானை மகத்துவம்
கவிபா.......... 30

தனியார் பால் நிறுவனங்களுக்கு சவால் விடும்
பால்வளத்துறை அமைச்சர் ராஜேந்திர பாலாஜி.......... 34

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் வேட்டு வைக்கும் மனுவாதிகள்

வளர்ந்து வரும் நாடுகள் என்ற தகுதியைப் பெறுவது என்பது, ஒரு நாடு உள்நாட்டு உற்பத்தியில் எந்த அளவிற்கு முன்னேறுகிறதோ அதைப் பொறுத்துதான் அமைகிறது. உலகிலேயே மிக வேகமாக வளரும் நாடு என்று இதுவரை சொல்லப்பட்டுவந்த இந்தியா இன்று, வளர்ந்து வரும் நாடுகள் பட்டியலில் இடம் பெறும் தகுதியை இழந்துவிட்டது என்று செய்திகள் குறிப்பிடு கின்றன.

2015ஆம் ஆண்டில் இரசிய நாட்டுக்கு இணையாக உள்நாட்டு உற்பத்தியில் வளர்ச்சி, என்ற பெருமையைப் பெற்றிருந்த இந்தியா, இந்த ஆண்டு அதல பாதாளத்திற்கள் விழுந்துள்ளது. ஒவ்வொரு நிதியாண்டிலும் இந்தக் கணிப்பு நடத்தப்படுகிறது.

ஜி டி பி என்பதுதான் ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சியையும் அளவிடும் முறையாக இருக்கிறது. சென்ற ஆண்டில் இந்தியாவின் ஜி டி பி குறியீடு 7.6 என்பதாக இருந்தது. இந்த ஆண்டு அந்தக்குறியீடு 6.1 என்ற அளவிற்கு குறைந்துள்ளதாக தகவல்கள் வந்திருக்கின்றன. இந்த அளவிற்கான தொய்வு எதனால் ஏற்பட்டது என்று பொருளாதார நிபுணர்களிடம் கேட்கப்பட்டபோது, கடந்த ஆண்டில் நடுவண் அரசால் கொண்டு வரப்பட்ட, நடப்பில் இருந்த 500, 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்புதான் காரணம் என்று கூறுகிறார்கள். மன்மோகன்சிங் காலத்தில் பத்து புள்ளிகளுக்கு மேல் இருந்த இந்த வளர்ச்சி இந்த அளவிற்கு குறைந்திருப்பது பாசக அரசின் திறமையின்மைக்கு சான்றாகும் என்று பொருளா தார வல்லுநர்கள் கூறுகிறார்கள்.



நாட்டின் நலத்தைவிட மனுவாத அரசை அமைப்பதுதான் முக்கியம் என்ற நோக்கில் செயல்பட்டு வரும் நடுவண் அரசு, தனது போக்கை மாற்றிக் கொள்ளாவிட்டால், இந்தியா உலக அரங்கில் இன்னும் கீழான நிலைக்குச் செல்ல நேரிடும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவில் வாழும் மக்களிடையே வேறுபாடு களை உண்டாக்கி, பெரும்பான்மை மக்களை இந்துக்கள் என்று கூறி, தங்களது மனுவாதத்தை நிலைநிறுத்தத் துடிக்கும் இப்போக்கு, இந்தியத்தை தலைகுனிவுக்கு உள்ளாக்கிவிடும் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

பாசக, தனது நிர்வாகத் திறமையின்மையை மக்களின் பார்வையிலிருந்து மறைப்பதற்காக, மாநில சுயாட்சியில் கை வைப்பது, மொழிகளில் கை வைப்பது, உணவுப் பழக்கங்களில் கை வைப்பது, கல்வியில் கை வைப்பது, ஒற்றுமையில் கைவைப்பது என்றும், எல்லாவற்றிற்கும் ஏதாவது ஒரு காரணம் கூறி சட்டம் கொண்டு வர முயற்சிப்பது என்றும் தனது நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கிறது நடுவண் அரசு. இவைகள் எல்லாம் வெளிச்சத்திற்கு வந்துதான் ஆகும். உள்நாட்டுக்குள்ளேயே மக்களெல்லாம் மனுவாத அரசுக்கு எதிராக புரட்சி செய்யும் நிலையை உருவாக்கிக் கொண்டிருக் கிறார்கள். இந்துக்கள் என்ற பெயரில் இருக்கும் நல்ல மனிதர்களுக்கு இக்கட்டான நிலையை மனுவாத அரசியல்வாதிகள் ஏற்படுத்திக் கொண்டி ருக்கிறார்கள். இந்துக்களே, மனுவாதிகளின் குரூரத்தன்மையை புரிந்து கொண்டு, சமுதாயத்திற்கு அவர்களை இனம் காட்டி, அவர்களை திருத்தும் நிலை வரும் என்பது காலம் தரும் பாடமாக அமையும்.

# அ.தி.மு.க.வின் நிலை?





அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைமைப் பொறுப்பு எந்தத் தமிழரிடம் மண்டியிடப்போகிறது என்ற எதிர்பார்ப்பு எல்லா தமிழர்களின் மனங்களிலும் பேரவாவாக நிலை கொண்டுள்ளது. செயலலிதா செயலிழந்தபின், அவருக்கு அடுத்தவராக இருந்த பன்னீர்செல்வம் மோடியின் மூளைக்கு அடிமையாகிப் போய் விட்டார்.

அதிமுகவின் பெண் முதலமைச்சரை சசிகலா தான் ஆட்டிப்படைக்கிறார் என்று பேசிய நாக்குகள் எல்லாம், சசிகலா எப்படி முதல்வராக லாம்? என்ற கேள்விகளை எழுப்பிக் கொண்டி ருந்தன. ஒரு முதல்வரையே ஆட்டி வைத்தவர், ஆட்சி செய்ய வைத்தவர் ஏன் முதல்வராகக்கூடாது? என்று அந்த நாக்குகளுக்குச் சொந்தக்காரர்கள் யோசிக்கவில்லை. இதைப் பேசுகிறவர்கள் எல்லாம் அறிந்து பேசுபவர்களல்ல. சில சூழ்ச்சிக்காரர்கள், தமிழர்களின் கைகளுக்கு ஆட்சி போய்விடக் கூடாது என்பதற்காக செய்த தகாத சூழ்ச்சிகளால் பேசிக்கொண்டிருந்தனர்.

அவர்கள் நினைவோ என்னவோ, சசிகலா சிறைக்குச் சென்றுவிட்டார். அவரது தோழி இருந்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது என்று கூறுவோரும் உண்டு. துணைப்பொதுச் செயலாள ராக தினகரன் அவர்கள் நியமனம். அதன்பின் ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் அறிவிப்பு, பரப்புரை, தேர்தல் நிறுத்தம், தினகரனுக்கு திகார் சிறை. எடப்பாடி பழனிச்சாமி நிர்வாகம் என்று தொடர்ந் தது.

பன்னீரைப்போலவே எடப்பாடியும் மோடியின் கைப்பாவையாக மாறிவிட்டாரோ என்கிற அளவிற்கு அரசியல் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. நான் யாருக்கும் அஞ்ச மாட்டேன், அடிமையாக மாட்டேன் என்ற உறுதியான கொள்கையோடு வீரத்தமிழராக, அதே நேரத்தில் அமைதியான மனிதராக திகாரிலிருந்து திரும்பியிருக்கிறார் திரு. தினகரன் அவர்கள்.

இனி, யார் தலைமையில் அதிமுக இயங்கும்? யார் மீதமுள்ள ஆண்டுகளில் தமிழகத்தை ஆட்சி செய்யப் போகிறார்கள்? யார் முதல்வர்? யார் பொதுச்செயலாளர்? விடை கிடைக்கும் காலம் விரைவில் இருக்கும் என்று நம்பலாம். இவைகள் எப்படி இருந்தாலும், தமிழகத்தை தமிழர் ஒருவர்தான் ஆளவேண்டும். அந்தத் தமிழரோ, தமிழச்சியோ யாருக்கும் அடிமையாகாதவராக இருக்க வேண்டும் என்பதே உணர்வுள்ள உண் மைத் தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.

**வேர்மகள்.**

# தமிழனை தலை நிமிர வைத்த தளபதி
# பிரிகேடியர் தீபன்

கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளையை பிறப்பிடமாகக் கொண்ட தீபனின் வேலாயுத பிள்ளை பகீரதகுமார்) இயக்கப்பெயர் சிவதீபன். இவர் சமயங்களில் தவபாலசிங்கம் என்றும் அழைக்கப்பட்டார்.

யாழ் மாவட்டம் தென்மராட்சியின் வரணி தான் தீபனின் பூர்விகமாகும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் விஞ்ஞான பீட மாணவனாகவிருந்த தீபன் பெற்ற க.பொ. த உயர்தர பெறுபேறுகள் அவருக்கு இலகுவாக பல்கலைக்கழக இடத்தைப் பெற்றுத் தந்திருக்கும் ஆனால் வரலாற்றுக் கடமையை உணர்ந்து போராளியானர் தீபன்.

தென்மராட்சிப்பிரதேசத்தின் முதலாவது பொறுப்பாளராக விளங்கிய மேஜர் கேடில்ஸின் (மகாலிங்கம் திலீபன் கண்டாவளை) இளைய மச் சினனாகிய தீபனை இயக்கத்தில் சேர்த்தது கேடில்ஸ் என்று கூறப்படுகிறது.

தீபனை இயக்கத்தில் சேர்த்த மேஜர் கேடில்ஸ் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி.லெப்.கேணல் பொன்னம்மான், விடுதலைப்புலிகளின் தொழில் நுட்பப் பிரிவுப் பொறுப்பாளர் கப்டன் வாசு, லெப். சித்தார்த்தன் (கேணல் சங்கரின் சகோதரன்) ஆகியோர் வீரச்சாவடைய காரணமாகவிருந்த 14 021987 அன்று கைதடியிலே இடம் பெற்ற வெடி விபத்தில் தானும் காற்றோடு காற்றாகிப் போனார்.

1984 இன் முற்பகுதியில் தன்னை இயக்கத்தில் இணைத்துக் கொண்ட பகீரதகுமார், ஆயுதப் பயிற்சி பெற்று தீபனாக மாறினார். இவருடைய தொடர்



பாடல் குறிப்புப் பெயர் "தாங்கோ பாப்பா"ஆகும். இவர் புலிகளின் முன்னாள் துணைத் தலைவர் மாத்தையாவின் மெய்ப்பாதுகாவலாராக நியமிக்கப் பட்டு பின்னர் பிரதான மெய்ப்பாது காப்பாள ரானார்.

1987ஆம் ஆண்டு யூலை 29ஆம் திகதி இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின் இந்திய அமைதிப் படைக்கு எதிரான அக்காலப்பகுதி சண்டையில், தீபன் கிளிநொச்சி இராணுவப் பொறுப்பாள ராகவும், பால்ராஜ் முல்லைத்தீவின் இராணுவப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

அக்காலத்தில் இந்தியப்படையினருக்கெதிரான அதிக தாக்குதல்கள் நடைபெற்ற மாவட்டங்கள் முல்லைத்தீவும் கிளிநொச்சியுமே ஆகும்.

இக்காலப்பகுதியில் தீபனின் இளைய சகோதர னாகிய வேலாயுதபிள்ளை சிவகுமாரும் போராட் டத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். தனது சகோதரனைப் போலவே வேகமாக வளர்ந்த கில்மன் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதி யாக நியமிக்கப்பட்டார். 1993இல் திருகோண மலைக்குப் பொறுப்பாளராக அனுப்பப் பட்ட கில்மன் 1944இல் நடைபெற்ற தவறுதலான வெடி விபத்தில் லெப். கேணல் கில்மனாக தன்னை ஆகுதியாக்கிக் கொண்டார்.

1988ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மன்னார் நீங்கலான வன்னிப்பகுதியின் இராணுவப் பொறுப் பாளராக பால்ராஜ் நியமிக்கப்பட்டார். துணை இராணுவப் பொறுப்பாளராக தீபன் இருந்தார். இந்த இரண்டு வீரர்களும் தமது போராளிகளை முன்னின்று வழி நடத்தி பல வெற்றிச் சமர்களுக்கு வித்திட்டார்கள்.

இந்திய அமைதிப்படை 1990ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஈழத்தை விட்டு அகன்றது. மீண்டும் ஜூன் மாதமளவில் இலங்கைப் படை களுடனான 2ஆம் ஈழப்போர் ஆரம்பமானது. பால்ராஜின் தலைமையின் கீழ் புலிகள் பல வெற்றி கரமான தாக்குதல்களை மேற்கொண்டார் கள். அவற்றில் பிரதானமானவை மாங்குளம் மற்றும் கொக்காவில் முகாம் தகர்ப்பாகும்.

பால்ராஜும் தீபனும் 1991ல் மேற்கொண்ட ஆனையிறவு முகாம் மீதான ஆகாய, கடல் வெளிச்சமரில் பங்கு பற்றி குறிப்பிடத்தக்க அளவான வெற்றியைப் பெற்ற போதும் முகாம் தகர்ப்பு என்ற இலக்கு எட்டப்படவில்லை.

1992ல் உருவாக்கப்பட்ட சார்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதியாக பால்ராஜ் நியமிக்கப்பட்டார். தீபன் வன்னிப்பகுதியின் தளபதியானார். இவர்களின் இணை மண்கின்டி மலை மீதான இதயபூமி நடவடிக்கையில் பங்கு பற்றி புலிகளுக்கு மகத்தான வெற்றியைத் தேடித் தந்தது.

தீபனின் திறமையும் வீரமும் வெளிப்பட்ட இரு சமர்கள் யாழ்தேவி மற்றும் தவளைப்பாச்சல் ஆகும்.

ஆனையிறவிலிருந்து வடக்காக யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட யாழ்தேவியை இடைநடுவில் தடம்புரள வைத்த பெருமை தீபனையே சாரும் 1993 செப்டம்பரில் இடம்பெற்ற இந்த இராணுவ நடவடிக்கையின் முதல் நாள் சண்டையிலேயே பால்ராஜ் காயம் காரணமாக களத்திலிருந்து அகற்றப்பட்டார். அதன் பின்னர் தீபனே முறியடிப் புச் சமருக்குத் தலைமை தாங்கினார்.

தீபனின் தந்திரத்தின்படி மண் கும்பிகளுக்குள் மணித்தியாலக்கணக்காக காத்திருந்த புலிகள் முன்னேறிய இராணுவம் மிக அருகில் வந்ததும் திடீர்த் தாக்குதலைத் தொடுத்து, அவர்களை நிலை குலைய செய்ததுடன் புலிகள் இரண்டு ரி 55 டாங்கிகளைக் கைப்பற்றுவதற்கு வழி சமைத்துக் கொடுத்தது.

இந்த இரண்டு ரி 55 டாங்கிகளில் ஒன்றை மண்ணுக்குள் புதைத்து பயன்படுத்தியே இரண்டு டோரா பீரங்கிப் படகுகளை சாலைப் பகுதியில் ஒரே நாளில் புலிகள் தகர்த்து சாதனை புரிந்தனர்.

1993 நவம்பரில் நடைபெற்ற ஈருடகச் சமரான தவளைப் பாய்ச்சல் நடவடிக்கையில் பூநகரி முகாமை தீபன் தலைமையிலான போராளிகளும் நாக தேவன்துறை கடற்படைத்தளத்தை பானு தலைமையிலான போராளிகளும் தகர்த்தனர். இங்கே கைப்பற்றப்பட்ட 5 நீருந்து விசைப் படகுகளே கடற்புலிகள் தோற்றம் பெற்று பலம் பெற உறுதுணையாக இருந்தது என்றால் மிகை யாகா.

1994ல் தீபன் யாழ்ப்பாணத்துக்கு மாற்றப் பட்டார். அக்காலப் பகுதியில் சந்திரிகா அம்மை யார் தலைமையிலான இலங்கை அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் பேச்சு வார்த்தை நடந்தது. 1995இல் முறிவடைந்த பேச்சு வார்த்தை 3ஆம் ஈழப்போருக்கு வழி சமைத்தது.



ரீதியாக தமது இராணுவத்தைக் கட்டமைக்க உதவின.

ஜெயசிக்குரு இராணுவ நடவடிக்கை 1997ல் ஆரம்பிக்கப்பட்டபோது புளியங்குளத்தை தக்கவைக்கும் பொறுப்பு தீபனிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஓமந்தையையும் நெடுங்கேணியையும் இலகுவாக கைப்பற்றிய இராணுவம் புளியங்குளத்தைக் கைப்பற்ற முடியாமல் மாற்றுப்பாதையில் கனகராயன்குளத்தையும் கரிப்பட்ட முறிப்பையும் கைப்பற்றியபோது புளியங்குளம் கைவிடப்பட வேண்டியிருந்தது.

1995ல் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற இராணுவத்தினரின் முன்னேறிப் பாய்தலுக் கெதிரான புலிப்பாய்ச்சலிலும் இடிமுழக்கம் நடவடிக்கைக் கெதிரான சண்டையிலும் தன் காத்திரமான பங்களிப்பை வழங்கினார்.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையை ஆரம்பத்தில் பால்ராஜ் சொர்ணம் தலைமையிலும் பின்னர் தீபன் பானு தலைமையிலும் புலிகள் எதிர்த்துப் போரிட்டனர். தீபன் தலைமையிலான போராளிகள் நவம்பர் 27 மாவீரர் நாள் முடியும் வரை யாழ்ப்பாணம் படையினர் கைகளில் வீழ்வதை வெற்றிகரமாக தடுத்து நிறுத்தினர்.

யாழ்ப்பாணத்தை விட்டு 1996 ஏப்ரல், மே காலப்பகுதியில் வெளியேறிய புலிகள் வன்னியை தளமாக்க முடிவு செய்தபோது அதற்குப் பெருந்தடையாக இருந்தது முல்லைத்தீவு இராணுவ முகாம் ஆகும். அம்முகாமை அகற்ற வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர் புலிகள். தீபனை அழைத்த தலைவர், முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதான ரெக்கியை ஆரம்பிக்கவும் தாக்குதல் திட்டத்தைத் தீட்டவும் உத்தரவிட்டார்.

தீபனின் திறமையான திட்டத்தினால் 1996 ஜூலை 18ல் முல்லைத்தீவு இராணுவ முகாம் தகர்க்கப்பட்டபோது 1000க்கும் மேற்பட்ட இலங்கை இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இங்கே கைப்பற்றப்பட்ட இரண்டு 122எம்எம் ஆட்லறி பீரங்கிகளே பின்னாளில் புலிகளின் மரபு

இதன்போது தீபனின் நம்பிக்கைக்குரிய தளபதிகளாக விக்கீஸ், அறிவு மற்றும் லோரன்ஸ் விளங்கினார்கள். இந்தக் கூட்டணியின் கண்டு பிடிப்பான மண் அணைக்கட்டும் அகழியுமே இலங்கை இராணுவத்துக்கு சிம்ம சொப்பனமாக இருந்தது என்பது யாவரும் அறிந்ததே.

இன்றைய தேச நிர்மானம் மற்றும் கட்டமைப்பு அமைச்சராக இருக்கும் விநாயகமூர்த்தி முரளீதரன் என்கின்ற கேணல் கருணா அம்மான் ஜெயசிக்குர இராணுவ நடவடிக்கை காலத்தில் தானே வன்னிப்பகுதியின் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டேன் என்று கூறி வருகிறார். ஆனால் அவன் தீபனுடன் இணைந்தே இந்தப் பொறுப்பை வகித்தார் என்பதும், ஒருங்கிணைப்பு வேலைகளை கவனித்தபோது ஒட்டுமொத்த பொறுப்பாளராக இருந்தவர் தீபன் என்பதையும் குறிப்பிடத் தவறி விட்டார்.

1998ல் ஜெயசிக்குரு கைவிடப்பட முக்கியக் காரணமாக இருந்தது சத்ஜெய நடவடிக்கையின் மூலம் படையினர் கைப்பற்றி வைத்திருந்த கிளிநொச்சியை ஓயாத அலைகள் 2ன் மூலம் புலிகள் மீளக்கைப்பற்றிக் கொண்டது. இத்தாக்கு தலிலும் தீபனின் பங்களிப்பு மிகக் காத்திர மானதாகும்.

1999ல் புலிகள் ஓயாத அலைகள் 3ஐ ஆரம்பித்து படையினர் ஜெயசிக்குரு இராணுவ நடவடிக்கை யின் மூலம் 18 மாதங்கள் கஷ்டப்பட்டு பிடித்து வைத்திருந்த பகுதிகளை வெறும் மூன்றே வாரங்களில் மீளக்கைப்பற்றிக் கொண்டனர்.

ஓயாத அலைகள் 3ன் முத்தாய்ப்பாக அமைந்தது அனையிறவு முகாம் கைப்பற்றலாகும் 1991ல் ஆகாய கடல் வெளிச்சமரில் பெற்ற பின்னடைவும் படிப்பினைகளும் பின்னாளில் உலகமே வியக்கும் வண்ணம் இடம்பெற்ற குடாரப்புத் தரையிறக் கத்துக்கு வழி சமைத்தது எனலாம்.

இத்திட்டத்தை தலைவர் சமர்க்களங்களின் நாயகன் பால்ராஜூக்கு விளக்கியபோது சற்றுத் தயங்கினாராம் பால்ராஜ். பின்னர் தீபன் செய்ய வேண்டிய கடமைகளை விளக்கியபின்பு தீபன் மீதிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை காரணமாக களத்தில் இறங்கினாராம் பால்ராஜ்.

குடாரப்புத் தரையிறக்கம் இடம் பெற்றபின் செம்பியன் பற்றிலிருந்து வெற்றிலைக்கேணி கட்டைக்காடு வரை நிலை கொண்டிருந்த படையி னரை விரட்டி அடித்தும் ஆனையிறவு முகாமை பின் பக்கமாக தாக்கியும் ஆனையிறவு முகாம் கைப்பற்றலில் முக்கியப் பங்காற்றினார் தீபன்.

2000 ஏப்ரல் 24ல் இடம்பெற்ற ஆனையிறவை மீளக் கைப்பற்றும் நோக்கிலான படையினரின் தீச்சுவாலை (ஆக்னிகீல) நடவடிக்கையை சின்னா பின்னமாக்கியது தொட்டு 2009 ஜனவரி வரை 55ஆம், 53ஆம் படையணியின் ஆனையிறவை மீளக் கைப்பற்றும் எத்தனையோ முயற்சிகளை தவிடு பொடியாக்கியவர் வட போர்முனைக் கட்டளைத் தளபதி தீபன். அதே போன்று கிளிநொச்சியைச்சுற்றி 18கிலோமீட்டர் நீளமான ட வடிவிலான மண் அணைக்கட்டு அமைத்து கிளிநொச்சியின் வீழ்ச்சியை பல மாதங்கள் (2009 ஜனவரி 1 வரை) தள்ளிப் போட்டவர் தீபன்.

கடைசியாக புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தில் ஏப்ரல் 1ஆம் திகதி பல படையணித் தளபதி களுடன் சேர்ந்து படையினருக்கெதிராக பாரிய முறியடிப்புச் சமர் ஒன்றைத் திட்டமிட்டார் தீபன். ஆனால் காலன் வேறு விதமாகத் திட்டமிட்டான் போலும். ஏப்ரல் 1ஆம் திகதி அன்றும் 2ஆம் திகதி அன்றும் தீபனுக்கு நெஞ்சிலே காயம்பட்டது. ஆனாலும் தொடர்ந்து போராடிய தீபன் எதிரியின் நயவஞ்சகமான நச்சுக்குண்டுத் தாக்குதலில் வீர காவியமானார்.

25 ஆண்டு காலம் ஓயாது அடித்துக் கொண்டி ருந்த இந்தப் புயல் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்திலே நிரந்தரமாக அடங்கிப்போனது.


சமர்க்களங்களின் நாயகன் பால்ராஜ் என்றால் எந்தவித சந்தேகங்களும் இன்றி சமர்க்களங்களின் துணை நாயகன் இந்த தீபன்தான். பால்ராஜ் எனும் பாசறையிலே வளர்த்தெடுக்கப்பட்ட இந்த கண்டாவளை கண்டெடுத்த கண்மணி, பால்ராஜ் மே 2008ல் மறைந்தபோது அழுதபடியே சொன்ன வார்த்தைகள் இவை "என்னை அருகிலே வைத்திருந்து தளபதியாக வளர்த்தெடுத்த தளபதி, அவன் என் போர் ஆசான்."

தமிழர்களை தலை நிமிர வைத்த இந்த இரண்டு வீரர்களும் இன்று நம்மிடையே இல்லை என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை அவர்களின் நினைவுகள் எம்மனங்களில் நீங்கா திருக்கும் என்பதும்......

# இரத்தக் குழாய் அடைப்பு நீக்குவதற்கான வழிமுறைகள்

**ஆஞ்சியோவுக்கோ, பைபாஸ் அறுவைச் சிகிச்சைக்கோ செல்லுமுன் நம்பிக்கையுடன் இதனைச் செய்தால் குணமாகலாம்.**

ஒரு கப் எலுமிச்சைச் சாறு, ஒரு கப் இஞ்சிச் சாறு, ஒரு கப் பூண்டுச் சாறு, ஒரு கப் ஆப்பிள் சைடர் வினிகர் இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலக்க வேண்டும். இலேசான இளஞ்சூட்டில் (சிம்மரில்) ஒரு மணி நேரம் கொதிக்க வைக்க வேண்டும். நான்கு கப், மூன்று கப்பாக சுண்டிவிடும். சூடு ஆறியவுடன் சாறு இருக்கும் அளவுக்கு, சம அளவு இயற்கைத் தேனைக் கலந்து குடுவையில் வைத்துக் கொள்ள வேண்டும். நாள்தோறும் காலை உணவுக்கு முன் ஒரு தேக்கரண்டி பானத்தை அருந்த வேண்டும். மகிழ்ச்சியுடன் பானத்தை அருந்த வேண்டும். அது சுவையாகவும் இருக்கும். இதய அடைப்பு வராது. அடைப்பு இருந்தாலும் சரியாகி விடும்.



# டோடோ பறவை

டோடோ பறவை, அழிந்த பறவையினங்களில் ஒன்று. பழங்காலத்தில் வாழ்ந்த பறவை இனங்களில் கடந்த 400 ஆண்டுகளுக்கு முன் அழிந்துபோன ஒரு அபூர்வப் பறவை. இந்தியப் பெருங்கடலில் ஆப்பிரிக்காவுக்கு அருகிலுள்ள மொரீசியஸ் தீவில்தான் டோடோ என்ற இந்த அழிந்துபோன பறவை வாழ்ந்து வந்தது.

டோடோ என்ற சொல்லுக்கு போர்த்துக்கீசிய மொழியில் முட்டாள் அல்லது அற்பமான என்பது பொருள். இது மொரீசியஸ் தீவில் வாழ்ந்த பறக்க முடியாத பறவையாகும். ஏறத்தாழ ஒரு மீட்டர் உயரமான டோடோ, நிலத்தில் கூடு கட்டி வாழ்ந்தது. பழங்களை உணவாகக் கொண்டது.

இது மொரீசியஸ் தீவில் வாழ்ந்த பறக்க முடியாத பறவையாகும். கிட்டத்தட்ட ஒரு மீட்டர் உயரமான டோடோ நிலத்தில் கூடு கட்டி வாழ்ந்தது. பழங் களை உணவாகக் கொண்டது. மனிதர்களைக் கண்டால் ஆவலுடன் ஓடி வரும் குழந்தை போல.

பழங்காலத்தில மொரீசியஸ் தீவில் வாழ்ந்து கொண்டிருந்த இந்தப் பறவைகளுக்கு 1598ஆம் நூற்றாண்டில் மொரிசியஸ் தீவில் வந்து இறங்கிய போர்ச்சுக்கீசியர்களால் ஆபத்து வந்தது. மனிதர் களிடம் குழந்தை போல விளையாடிய பறவைகளை தீவிரமாக வேட்டையாடி உண்ண ஆரம்பித்தனர். 100 ஆண்டுகளுக்குள் முற்றிலுமாக அந்த இனமே அழிக்கப்பட்டது. கடைசி பறவையும் 1681இல் இறந்தது.

அதன்பின்தான் ஒரு உண்மை மனிதனுக்கு புரிந்தது. அந்த பறவை இனம் அழிந்தவுடன் "கல்வாரியா" எனப்படும் மரமும் அழிய ஆரம் பித்தது. மரங்கள் அழிவுக்குக் காரணம் என்ன வென்று பார்த்த போதுதான் ஒரு உண்மை தெரிந்தது. டோடோ பறவைகள் கல்வாரியா மரத்தின் பழங்களை விரும்பி உண்ணக்கூடியவை. அவ்வாறு உண்டு, தன் வயிற்றில் செரித்து வெளியேறும் கழிவுகளில் கலந்து விழும் விதைகள் மட்டுமே அந்த மரத்தை முளைக்க வைக்கும் தன்மை கொண்டது.

மனித மண்டையோட்டைப்போல கடினமான உறையுடைய விதை களை உடையது என்பதால் அந்த மரத்திற்கு இப்பெயர். இந்த மரத்தின் பழங்களை டோடோ தின்றுவிட்ட கொட்டைகளைத் துப்புவது வழக்கம்.

டோடோக்களின் வயிற்றினுள் புகுந்து வந்த கல்வாரியா விதைகள் மட்டுமே முளைக்கும் திறன் பெற்றவையாக இருந்தது. வேறு எந்த விதத்திலும் அந்த விதையை முளைக்க வைக்க முடியவில்லை. இப்படியொரு ஆச்சரிய உறவு பறவைக்கும், மரத்திற்கும் இருந்திருக்கிறது.

இதை அறியாத மக்கள் டோடோ பறவையை வேட்டையாடிவிட, அதைத் தொடர்ந்து அதனுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த கல்வாரியா மர இனமும் அழிந்து போனது. இயற்கை ஒன்றை யொன்று இணைந்து வாழ வைக்கும் என்பதுதான் இயற்கை யின் அறம்.



# ஆனந்தபுரம் ஒரு வீரவரலாறு

முல்லை மாவட்டம் ஆனந்தபுரம் பகுதியில் வல்லாதிக்க அரசுகளின் உதவியுடன் சிங்களப் படைகள் வீசிய இரசாயன நச்சுக்குண்டுத் தாக்கு தலில் 04.04.2009 அன்று வீரச்சாவைத் தழுவிக் கொண்ட விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள் பிரிகேடியர் தீபன், பிரிகேடியர் மணிவண்ணன், பிரிகேடியர் ஆதவன், பிரிகேடியர் விதுசா, பிரிகேடி யர் துர்க்கா, கேணல் நாகேஸ், கேணல் தமிழ்ச் செல்வி, கேணல் அமுதா உட்பட ஆனந்தபுரத்தில் உயிர் நீத்த ஏனைய மாவீரர்களின் 8ஆம் ஆண்டு வீரவணக்க நாள்.

முப்பதாண்டு கால ஆயுத விடுதலைப் போராட் டத்தின் அசைவியக்கத்தை உலுப்பிவிட்ட நிகழ்வாக 2009 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத்தின் தொடக்கத் தில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஆனந்தபுரம் கிராமத்தில் நிகழ்ந்த சமர் கணிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் எதிர்பார்த்ததற்கு மாறாக பாரிய ஆள் இழப்புகளுக்குப் பின்னரும் தொடர்ச் சியாக ஆயிரக்கணக்கான சிங்கள தேசத்தின் படைவீரர்கள் களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தனர். அதே வேளை விடுதலைப்புலிகளுக்கான படைக்கல வளங்கள் தமிழீழ கடற்பரப்பினூடாக தாயகத்திற்கு கொண்டு செல்லப்படுவதை தடுப்பதற்கான முழுமையான “கடற்தடுப்புச் சுவரை“ வல்லாதிக்க அரசுகளின் உதவியுடன் சிங்கள தேசம் அமைத் திருந்தது.

அத்தோடு பாரிய படைக்கப் பிரயோகத்துடனும் வல்லாதிக்க அரசுகளின் புலனாய்வு தகவல்களையும் உள்வாங்கியவாறு சிங்கள தேசத்தின் இராணுவ பூதம் தமிழீழ தாயகத்தை முழுமையாக அழிக்கும் வகையில் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது.





என்றாலும் அத் தாக்கு தலை முறியடிக்க முடி வெடுத்திருந் தார்கள்.

அதன்படி ஆனந்புரம் பகுதியைச்சுற்றி வளைத்து, அப் பகுதியில் நிலை கொண் டிருந்த விடுதலைப்புலி களை தனி மைப்படுத்தி முற்றுகை பாணியிலான தாக்குதலை சிறிலங்கா படைகள் முன் னெடுத்தன.

தமிழீழ தேசியத் தலை வரை பாதுகாப்பாக பின்னர்த்திய விடுதலைப் புலிகள், சிறிலங்கா படை களின் முற்றுகையை முறியடிப்பதற்காக உறுதி யுடன் போர் செய்து கொண்டிருந்தார்கள்.

வரையறுக்கப்பட்ட போர்த் தளவாடங்களு டனும் ஆட்பல வளத்துடனம் போரிட்ட தமிழர் சேனை வன்னிப் பெருநிலத்தின் பெரும்பகுதியை கைவிட்டு பின் வாங்கியிருந்தது. எனினும் இறுதி வரை ஏதோ ஒரு இடத்திலிருந்து மீண்டும் ஆக்கிர மித்து வரும் படைகளை தடுத்து முறியடிப்பு தாக்கு தலை செய்து தமிழழ தயாகத்தை மீட்டு விடலாம் என்றே அனைத்து மக்களும் நம்பியிருந்தனர்.

அந்த வகையில் தான் ஆனந்தபுரம் புகுதியில் இறுதியாக அறிவிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பு வலயத்திற்கு வெளிப்புறமாக விடுதலைப்புலிகளின் இறுதிப்போருக்கான அவசர போரரங்க ஒழுங்கு படுத்தப்பட்டது.

தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் உட்பட விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகள் பலரும் அடங்கலாக தளம் அமைத்து பெருமளிவிலான முறியடிப்புத் தாக்குதல் ஒன்றை திட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

விடுதலைப்புலிகளின் பிரதான போர்க்கலங்கள் அனைத்தையும் உள்வாங்கி திட்டமிடப்பட்ட இத்தாக்குதலுக்காக பெருமளவு விடுதலைப்புலி களும் நிலைப்படுத்தப்பட்டிருந்தனர். தொலைதூர தாக்குதலுக்கேயென வடிவமைக்கப்பட்ட போர்க் கலங்கள் அனைத்தும் குறுந்தூர தாக்குதலுக்காக நிலைப்படுத்தப்பட்டு இருந்தது.

விடுதலைப்புலிகளின் இத்திட்டமிடலை ஏதோ ஒரு வகையில் அறிந்து கொண்ட சிறிலங்கா படை யினர் எத்தனை இழப்பைச் சந்தித்தேனம் தடை செய்யப்பட்ட போர் ஆயு தங்களைப் பயன்படுத்தி

இத்தளத்தில நிலை கொண்டு இறுதிவரை உறுதியோடு போரிட்டு பிரிகேடியர் தீபன், பிரிகேடி யர் ஆதவன் கடாபி, பிரிகேடியர் மணிவண்ணன், பிரிகேடியர் விதுசா, பிரிகேடியர் துர்க்கா உட்பட விடுதலைப் புலிகளின் பல மக்கியத் தளபதிகள் உட்பட பல நூற்றுக்கணக்கான போராளிகள் மாவீரர்களாக ஆனந்தபுரம் மண்ணில் வீழ்ந்து தமிழீழ தாயகத்தின் விடி வெள்ளிகளாகப் போனார்கள்.

**விடுதலைப்புலிகளின் மூத்த தளபதியான பிரிகேடியர் தீபன்**

விடுதலைப்புலிகளின் மூத்த தளபதியான பிரிகேடியர் தீபன் தமிழீழ விடுதலைப் போராட் டத்தின் ஒரு ஒப்புயர்வற்ற தளபதி. ஜெயசிக்குறு போர்க்களத்தில் சிறிலங்கா படைகளுக்கு சிம்ம சொப்பனமாக அறியப்பட்ட தளபதி பிரிகேடியர் தீபன்.

வவுனியாவிலிருந்து முன்னேறி, கிளிநொச்சி யிலுள்ள படைகளுடன் இணைப்பை செய்து, வன்னி பெருநிலத்தை கூறுபோடும் திட்டத்துடன், முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தை, புளியங் குளத்தில் 1997 ஆம் ஆண்டில் தடுத்து நிறுத்தி புளியங்குளத்தை புலிகளின் புரட்சிக்குளமாக்கிய தளபதிதான் பிரிகேடியர் தீபன்.

புளியங்குளத்தை சுற்றிவளைத்து, அதற்கான வழங்கல் பாதைகளை துண்டித்தபோதும், தளராமல் நாங்கள் “இங்கேயே சமைத்துச் சாப்பிடுவோம்.

ஆனால் ஒரு போதும் பின்வாங்கக்கூடாது" என உறுதியோடு கூறி அங்கேயே நிலைகொண்டிருந்தத முன்னேறி வந்த டாங்கிகளையும் தகர்த்து ஒரு துருப்புக்காவி கவச வாகனத்தையும் கையகப்படுத்தி னார்.

அதற்குப் பின்னர் நடைபெற்ற ஓயாத அலைகள் 2 நடவடிக்கையிலும் போர்த்தளபதி பிரிகேடியர் தீபனின் தந்திரோபாயமான படைநகர்த்தல் மிகப்பிரச்சித்தமானது.

சிறிலங்காப் படைகள் இன்றுவரை அமைத்த முன்னரங்க பாதுகாப்பு நிலைக் கட்டமைப்புக்குள், மிகவும் பாதுகாப்பானதும் அதற்குள் ஊடுருவி தாக்குதலை செய்வது என்பது சாத்தியமற்றது என்ற நிலையிலான பலமான பாதுகாப்பு அரணாக அன்றைய கிளிநொச்சி சிறிலங்கா இராணுவதளம் இருந்தது.

அப்படியான இறுக்கமான தளத்தைக் கைப்பற்றும் சமரை வழிநடத்தியவர் தளபதி தீபன் அண்ணை. அதற்குப் பின்னர் ஓயாத அலைகள் 3 படை நடவடிக்கையின்போது பரந்தன் படைத் தளத்தை கைப்பற்றும் நடவடிக்கையின்போது பட்டப்பகலில் மரபுவழி இராணுவமாக தமிழர் சேனையை வழிநடத்தி பல மூத்த தளபதிகளின் பாராட்டைப் பெற்றவர்.

ஆனந்தபுரம் தளத்தை தக்க வைக்க வேண்டும். அல்லது அங்கேயே வீரமரணம் அடைய வேண்டி வரும் என்பதை தெளிவாக தெரிந்து கொண்டு இறுதிவரை உறுதியுடன் போரிட்ட தளபதியின் இறுதி மூச்சும் ஆனந்தபுரம் மண்ணில் அமைதி யாய் போனது.

**பிரிகேடியர் ஆதவன் அல்லது கடாபி**

பிரிகேடியர் ஆதவன் அவர்கள் விடுதலைப் புலிகளின் இன்னொரு முக்கிய தளபதி. சிறிலங்கா இராணுவத்தினருக்கு எதிராக தமிழீழத் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான கரும்புலி தாக்குதல்களை திட்டமிட்டு நெறிப்படுத்திய சிறப்பு நடவடிக்கைக்கான தளபதி.

தமிழீழ தேசித் தலைவரின் பாதுகாப்பு பணிகளுக்காக தனது போராட்ட வாழ்க்கையின் பெரும்பகுதியைச் செலவழித்த இத்தளபதி, படைக்கட்டுமானங்களான தொடக்கப் பயிற்சி கல்லூரிகளையும் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி களையும் நிர்வகித்து வந்திருந்தார்.

தமிழீழ தாயகத்தை விடுவிக்கும் போரில், குறைந்தளவு ஆளணி வளங்களுடன் சமரை வெல்வதற்காக, தமிழீழ தாயகத்திலிருந்த எதிரிகளின் தளத்திற்குள், ஆழ ஊடுருவி மேற்கொள்ளப்படும் கரும்புலித்தாக்குதல்கள் பெரும்பாலும் இவரது நெறிப்படுத்தலிலேயே நடந்திருக்கிறது.

நவீன மரபு வழிக்கட்டமைப்புகளுக்கு அமை வாக சிறப்பு இராணுவ நடவடிக்கைகளை நெறிப்படுத்திய இத்தளபதி புதிய போராளிகளை



உருவாக்கும் பயிற்சிக் கல்லூரிகளையும் நேரடியாக கண்காணித்து வந்தார்.

வன்னியில் போர் இறுக்கமான கட்டத்தை அடைந்தபோது களமுனையிலிருந்தே, நேரடியாக படை நகர்த்தலை மேற்கொண்ட இத்தளபதியும் ஆனந்தவுரம் சமரில் விழுப்புண் அடைந்தார். பின்னர், களமுனையிலிருந்து இவரை அகற்றுவதற்கு போராளிகள் பலத்த முயற்சிகள் மேற்கொண்ட போதும் அது முடியாமல் போக தமிழீழ தாயகத்தை விடுவிக்கும் போரில் தன்னுயிரையும் அர்ப்பணித்துக் கொண்டார்.

**ஆட்லறி பீரங்கிப் படையணி தளபதி பிரிகேடியர் மணிவண்ணன்.**

விடுதலைப் புலிகளின் போராட்ட வலுவை அடுத்த கட்ட பரிணாமத்திற்குள் நகர்த்திய மோட்டார் பீரங்கிகளும் ஆட்லறி பீரங்கிகளும் தான். ஆட்லறி பீரங்கிப்படையணி தளபதி பிரிகேடியர் மணிவண்ணனின் போராட்ட வாழ்க்கையாக இருந்தது.

“ஐஞ்சிஞ்சி“ என செல்லமாக அழைக்கப்பட்ட 120 மிமீ பீரங்கிகள்தான் ஓயாத அலைகள் 1 நடவடிக்கையின் போது பாரிய படைக்கல சக்தியாக விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்தது.

முல்லைத்தீவில் கைப்பற்றப்பட்ட 122 மிமீ ஆட்லறிகளுடன் ஆரம்பமான விடுதலைப்புலிகளின் கேணல் கிட்டு ஆட்லறி படையணி வெளிநாடகளில் கொள்வனவு செய்யப்பட்ட இன்னும் பல ஆட்லறிகளுடன் பெருவளர்ச்சி கண்டிருந்தது.

இரண்டு ஆட்லறிகளுடன் ஆரம்பித்த ஆட்லறி படையணி பல பத்து ஆட்லறிகளைக் கொண்டதாக வளர்ச்சியடைந்தபோதும், அதனை சரியான முறையில் பயன்படுத்தி தமிழீழப் போராட்டத்தை முழுமையான மரபு வழி இராணுவமாக்கி முழுமைப்படுத்திய பெருமை இத்தளபதிக்குச் சேரும்.

மரபு வழியான முறையில் ஆட்லறிகளை பயன் படுத்தினாலும் நேரடிச் சூடுகளை வழங்கி எதிரிகள் மீது திகைப்புத் தாக்குதலை நடத்தி தரைவழியாக முன்னேறும் புலிகளுக்கு காப்பரணாக ஆட்லறிகளை பயன்படுத்தியமை இப்படையணியின் சிறப்பாகும்.

ஆனந்தபுரத்தில் நடைபெற்ற அந்தச் சமரின்போது ஆட்லறிப் படையணியை உருவாக்கி வளர்த்தெடுத்த பிரிகேடியர் மணிவண்ணன் அவர்களும் தமிழீழ காற்றோடு காற்றாக கலந்து போனார்.

2ஆம் லெப்ரினன்ற் மாலதி படையணியின் சிறப்புத் தளபதி பிரிகேடியர் விதுசா மற்றும் மேஜர் சோதியா சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி பிரிகேடியர் துர்க்கா

தமிழீழப் பெண்களின் போர்முகத்தை உலகத்திற்குக் காட்டிய விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிகளின் மூத்த தளபதிகளான 2ஆம் லெப்ரினன்ற் மாலதி படையணியின் சிறப்புத் தளபதியுமான பிரிகேடியர் விதுசா அவர்களும், மேஜர் சோதியா சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியான துர்க்கா அவர்களும் விடுதலைப் புலிகளின் பெரும்பாலான அனைத்துப் போரரங்குகளிலும் தமது படையணிகளை நேரடியாக வழிநடத்தியிருந்தார்கள்.

ஆனையை அடக்கிய அரியாத்தை என வரலாறு தேடிக் கொண்டிருக்கும் எம்மவர் மத்தியில் அரியாத்தைகளையே உருவாக்கிக் காட்டிய பெருமை இவ்விரு தளபதிகளையுமே முக்கியமாக சேரும். ஆண் போராளிகளுக்கு நிகராக பெண் போராளிகளையும் போர்க்களத்தில் ந்கர்த்திய இப்போர்த் தளபதிகள், தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுத்து, உலகப் பெண்களுக்கு முன்னுதாரணமாக தமிழீழப் பெண்களை உருவாக்கினார்கள்.

ஆனந்தபுரம் சமரின்போது இவர்களும் ஆனந்தபுரத்தின் விடிவெள்ளிகளாக தமிழீழ விடுதலைக்காக தம்முயிரை அர்ப்பணித்து வீர காவியம் படைத்தார்கள்.

ஆனந்தபுரம் சமரில் மூத்த தளபதிகள் பலரையும் களமுனைத்தளபதிகள் பலரையும் நூற்றுக்கணக்கான போராளிகளையும் இழந்த அந்தச் சமர் தமிழ் மக்கள் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது.

தமிழீழ விடுதலைப் போரினை வழி நடத்திய தலைவனையும் போராளிகளையும் உலுப்பிவிட்ட, அந்த இழப்பு தமிழீழ விடுதலைப் போரோட்டத்தின் இராணுவ சமநிலையை எதிரிக்குச் சாதகமாக்கி விடுதலைக்காக விரைந்த பயணத்தில் பாரிய பின்னடைவை ஏற்படுத்திவிட்டது.

ஆனாலும் தர்மத்தின் அடிப்படையில் பயணித்த தமிழீழ விடுதலைப் போராட்டம் மீண்டும் எழுச்சியோடு புதிய பரிணாமத்தில் புதுவீச்சோடு பயணிக்க தோள்கொடுப்போம் என உறுதியெடுப்போம். ●

# சிறந்த இந்து யார்?

இந்து வேதங்களின்படி மாட்டிறைச்சியை உண்ணாத ஒருவன் சிறந்த இந்துவாக இருக்க முடியாது. விவேகானந்தர்.

பெண்களின் திருமண வைபவங்களில் பசு மாட்டையும் காளை மாட்டையும் அறுக்க வேண்டும். ரிக்வேதம்.

பரோபகாரம் இடம் ஷரீரம் என்பது இந்த தர்ம சாஸ்திரத்தின் கூற்றாகும். அதாவது இவ்வுடல் இறைவனால் கொடுக்கப்பட்டதே, பிறருக்கு உதவவே, அதன் அடிப்படையில்... இறைச்சிக்குரிய மிருகங்களை மனிதர்கள் உண்ணுவது பாவமில்லை. உண்ணுபவர்களையும் உணவுகளையும் பிரம்மனே படைத்தான். மனுஸ்மிருதி. பாகம் 5 வசனம் 30.

அறுத்துப் பலியிடும் இறைச்சியை உண்ணாத மனிதன், 21 ஜென்மங்களுக்கு, பலியிடும் விலங்காக உருவெடுப்பான். மனுஸ்மிருதி பாகம் 5 வசனம் 35.

ஒரு பிராமணர், வழிபாட்டின்போது தனக்குக் கொடுக்கப்பட்ட இறைச்சியை உண்ண மறுத்தால் நரகம் செல்வார். வசிஷ்ட முனிவர் 11/34.

விருந்தினர் வந்தால் பசுமாட்டின் இறைச்சி அளிப்போம். அபஸ்டாம் கிரிசூத்திரம் 1/3/10.

மிக மிருதுவாகவும், சுவையாகம் இருப்பதால் பசு மாட்டிறைச்சியை உண்கிறேன். இராமாயணத்தின் மகரிஷி யாக்யவல்க்கியர் (சீதையின் தந்தையின் குரு) சத்பத் பிரமாணம் 3/1/2/21.





# ஏழைகளின் விடிவெள்ளி காமராசர்

காமராஜர் முதல்வராக இருந்தபோது, பழைய சட்டமன்ற விடுதியில் மண்ணாங்கட்டி என்பவர் கீழ்மட்ட ஊழியராக இருந்தார். சட்டமன்ற உறுப்பி னர்கள் கேட்பதை வாங்கித் தருவார். முதல் தளத்தில், முதல் அறையில் இருக்கும் மூக்கையாத் தேவர் அறையிலேயே மண்ணாங்கட்டி இருப்பார்.

ஒருமுறை "ஏம்பா மண்ணாங்கட்டி அவசரமாக வெளியில் போறேன், குளிச்சு முடிச்சு ரெடியாகுற துக்குள்ள இட்லி வாங்கி வந்திடு" என்று 100 ரூபாயைக் கொடுத்தார் மூக்கையாத் தேவர், சொன்னபடியே அவர் குளித்து விட்டு இட்லிக்காக காத்திருந்தார்.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. தலையில் சுமையுடன் தட்டுத் தடுமாறி வந்து சேர்ந்தார் மண்ணாங்கட்டி.பார்த்ததும் "ஏய்யா நான் அவசரமாக வெளியில் போகணும்னு காத்துக் கிட்டிருக்கேன். இட்லி வாங்க இவ்வளவு நேரமா" என்று எகிறினார் மூக்கையாத் தேவர். மண்ணாங் கட்டிக்குக் கோபம். "என்னங்கய்யா நீங்க, இங்க உணவகத்தில் அவ்வளவு இட்லி இல்லைன்னு சொல்லிட்டாங்க, மவுண்ட் ரோடெல்லாம் போய் அலைஞ்சு 100ரூபாய்க்கு இட்லி வாங்கிட்டு வந்திருக்கேன்." என்று பதிலுக்கு சத்தம் போட்டார். அந்த அளவிற்கு அப்பாவியானவர் மண்ணாங் கட்டி.

வெள்ளந்தியான மண்ணாங்கட்டியின் தலையில் ஒருநாள் இடி விழுந்தது.இந்த இடி ஒரு உத்தரவின் வடிவில் வந்து இறங்கியிருந்தது.அந்த உத்தரவை படித்துக் காட்டச் சொல்லி, வீட்டில் அழுது புரண்டு கதறினார் மண்ணாங்கட்டி.அரசாங்க உத்தியோகத்தில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் எல்லாம் இனி வேலையில் இருக்கக்கூடாது, பணியில் இருந்து நீக்கப்படுகிறார்கள்.என்று காமராசர் போட்ட உத்தரவுதான் அந்தக் கடிதம். இரண்டு நாள் கழித்து பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு ஓடிவந்தார் மண்ணாங் கட்டி. மூக்கையாத் தேவரிடம் வந்து, அவரைப் பார்த்து, தரையில் விழுந்து கதறி அழுதார்.

மூக்கையாத்தேவர், அவரிடம் என்ன?ஏது?என்று விசாரிக்க, "இப்படி ஒரு உத்தரவு வந்திருக்கிறதே,

என் குடும்பம் எல்லாம் நடுத்தெருவுக்கு வந்துடுச்சே, எப்படியாவது காப்பாத்துங்க ஐயா" என்று பித்துப் பிடித்தவர் போல அழுகிறார். ஏதாவது சமாதானம் சொல்ல வேண்டுமே என்று "முதல்வர் ஆபீசுக்கு போன் போடுடா கேட்டுடலாம்" என்றார் மூக்கை யாத் தேவர். அப்போது எல்லாம் நேரடியாகப் பேசும் தொலைபேசி வசதி இல்லை. ஆப்பரேட்டரிடம் கூறிவிட்டு காத்திருக்க வேண்டும். முதல்வர் அலுவல கத்தில் யாராவது உதவியாளர்கள் எடுப்பார்கள்.

மண்ணாங்கட்டி புக் செய்த நேரம் உடனே தொடர்பு கிடைத்தது. மறுமுனையில் முதல்வர் காமராசர். "யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்கிறார்.அய்யா நான்தான் அசம்பிளி ஆஸ்டல் பியூன் மண்ணாங்கட்டி பேசுறங்க ஐயா, என்றபடியே அருகில் இருந்த மூக்கையாத் தேவைரைப் பார்க்கிறார்.அவரோ, முதல்வர் அலுவலகத்தில் யாராவது உதவியாளர்கள்தான் தொலைபேசியை எடுத்திருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டு, "எழுதப்படிக்கத் தெரியாத வங்க எல்லாம் முதல்வரா இருக்கிறப்போ நான் பியூனா இருக்கக்கூடாதான்னு கேளுடா" என்கிறார். அவர் சொன்னதை அப்படியே அச்சுப்பிசகாமல் மறுமுனையில் இருந்த காமராசரிடம், "ஐயா, எழுதப்படிக்கத் தெரியாதவங்க எல்லாம் முதல்வரா இருக்கிறப்போ நான் பியூனா இருக்கக்கூடாதான்னு, தேவர் ஐயா கேட்கச் சொல்றாருங்க" என்கிறார் மண்ணாங்கட்டி.மறுமுனையில் பேச்சே இல்லை.

அடுத்த 30 நிமிடத்தில் உயர் அதிகாரிகள் 3பேர் அங்கே வந்துவிட்டார்கள்.முதல்வருக்கு போன் செய்தது யார்?என்றார்கள்.நான்தான் ஐயா என்று முன்னே வருகிறார் மண்ணாங்கட்டி. "உங்களை கையோடு அழைத்துவரச் சொன்னார் முதல்வர், உடனே புறப்படுங்கள் என்று அவசரம் காட்டி னர்.அப்போதுதான் புரிந்தது.மூக்கையாத்தேவருக்கு பதட்டம் தொற்றிக் கொண்டது. மண்ணாங் கட்டியோ "ஐயா நீங்களும் வாங்க" என்று அழுகி றார். பின்னாடியே வருகிறேன்.நீ போப்பா என்று அனுப்பி வைக்கிறார். வாகனம் கோட்டைக்குப் பறக்கிறது.

முதல்வர் அறையில் உள்ள சோபாவில், கன்னத் தில் கைவைத்தபடி கவலைதோய்ந்த முகத்தோடு உட்கார்ந்திருக்கிறார் காமராசர். கதவு திறக்கப் படுகிறது. மண்ணாங்கட்டி முதலில் நுழைய அதிகாரிகள் சற்று ஒதுங்கி கதவோரம் நின்று கொண்டார்கள்.

"நீங்கதான் மண்ணாங்கட்டியா? என்கிறார் காமராசர்."ஆமாங்க ஐயா, நான் தெரியாமப் பேசிட்டேன். என்னை மன்னிச்சுடுங்க ஐயா" என்று கூறியபடியே கீழே விழுந்தார் மண்ணாங் கட்டி. அந்தக் கலாச்சாரம் காமராசருக்குப் பிடிக்காது. அதிகாரிகளைப் பார்க்க, அவர்கள் உடனே எழுப்பி நிற்க வைக்கிறார்கள். அவரை, வா... வாண்ணே... வந்து பக்கத்தில் உட்காருங்க என்றழைக்கிறார். மண்ணாங்கட்டி தயங்கி நிற்கிறார். காமராசர் முறைக்க, தயங்கித் தயங்கி பக்கத்தில் சென்று உட்காருகிறார்.


மண்ணாங்கட்டியை முதுகில் தட்டுக் கொடுத்து, முகத்தையே உற்றுப்பார்த்த முதல்வர் காமராசர், பட்டென்று கும்பிட்டு, "நான் தப்புப் பண் ணிட்டேன், தெரியாம செய்திட்டேன், மன்னிச்சுடு, அந்த தவறை நீதான் எனக்கு புரிய வச்சே. ரெண்டு நாளா உங்க வீட்ல சோறு தண்ணியில்லியாமே, சமைக்கலையாமே, உங்களுக்கு ரெண்டு பொம்பளப் புள்ளைங்க... எல்லாத்தையும் இப்பதான் தெரிஞ்சுக் கிட்டேன். எவ்வளவு பெரிய தப்பு செய்திருக்கேன். அப்படி ஒரு உத்தரவை நான் போட்டிருக்கக் கூடாது.இனிமே புதிதாக வேலைக்கு வருபவர் களுக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்னு போட்டிருக்க வேண்டும்.நான் செய்தது தவறுதான்" என்று தட்டிக் கொடுத்து ஆதரவு சொல்ல, மண்ணாங்கட்டி கதறி அழுகிறார். காமராசருக்கும் பேச்சு வரவில்லை.

அந்த நேரமே ஒரு உத்தரவு தயாராகிறது. காமராசர் கையொப்பமிடுகிறார். மண்ணாங் கட்டிக்கு மீண்டும் அரசு வேலை, அதிகாரிகளைப் பார்த்து, இவரை அழைத்துக் கொண்டு போங்க, வேலை கொடுத்தாச்சு. இனி கவலைப்படாதீங்கன்னு, இவரோட மனைவி, குழந்தைகள்கிட்ட சொல்லுங் கன்னு அதிகாரக் குரலில் உத்தரவிடுகிறார். பிறகென்ன நினைத்தாரோ சற்றுத் தயங்கி "போகிற போது வெறும் கையோடு போகாதீங்க, ஓட்டல்ல எல்லாருக்கும் சாப்பாடு வாங்கிட்டுப் போய் கொடுங்க.ரெண்டு நாளா அவர்கள் சாப்பிட்டிருக்க மாட்டார்கள்" என கண்டிப்போடு அதிகாரிகளிடம் கூறுகிறார் காமராசர்.

மண்ணாங்கட்டி பேச வார்த்தைகளின்றி கையெடுத்துக் கும்பிட்டபடியே வெளியேற, முதல்வர் காமராசரும் எழுந்து கையெடுத்து கும்பிட்டபடியே அனுப்பி வைத்தார். ஒரு ஏழையின் கண்ணீர், வலி, இன்னொரு ஏழைக்குத்தான் தெரியும்.ஆமாம்.காமராசர் ஏழையாகவே, ஏழை மக்களுக்காகவே வாழ்ந்தார்.

●

# சோழநாடு சோறுடைத்தா? சொல்லுடைத்தா?




கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கும், பாண்டிய மன்னனுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதையடுத்து பாண்டிய நாட்டில் இனி இருக்கக் கூடாது என்று முடிவெடுத்த கம்பர், சோழ நாட்டை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தார். பல நாட்கள் நடந்து சோழ நாட்டின் எல்லைப் பகுதியில் உள்ள ஒரு சிற்றூரை அடைந்தார்.

காலை வேளையில் சிற்றூரின் வயல்வெளி ஓரத்தில் ஒரு சிறுவன் உட்கார்ந்து கொண்டிருந் தான். அதை தூரத்தில் இருந்து கவனித்த கம்பர், பெரும் கவிஞராகிய நான் வருவதை அந்தச் சிறுவன் அறிந்திருந்தும், எழுந்து மரியாதை தரவில்லையே, இந்த சிறுவயதிலேயே இவ்வாறு இருக்கலாமா? என கோபம் கொண்டு, “நுனிக்கரும்பும் இனிக்குமோ?“ என்று சிலேடையாக சிறுவன் காதில் விழும்படி கூறினார். அதற்கு அந்தச் சிறுவன், சிறிதும் யோசிக்காமல் கண நேரத்திற்குள் “சகலமும் கசக்கும் அய்யா“ என்று பதிலுரைத்தான். இதனை சற்றும் எதிர்பாராத கம்பர் திகைத்துப் போனார்.

இதற்கான அர்த்தத்தை கம்பர் அறிந்து கொண்டார். அந்த அர்த்தம் என்ன தெரியுமா?

கரும்பின் நுனிப்பகுதி எப்போதும் இனிப்பு சுவை குறைந்து காணப்படும். அடிப்பகுதிதான் தித்திப்பான இனிப் புடன் இருக்கும். உலகம் அறிந்திடாத சிறுவன், இன்னும் பக்குவப்பட வேண்டும். அதாவது பெரியவர்களுக்கு மரியாதை தருவதற்கு கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை சுட்டிக் காட்டவே கம்பர் நுனிக்கரும்பும் இனிக்குமோ? என்றார்.

ஆனால் அந்தச் சிறுவன், காலைக் கடன் முடிக்கும் வேளையில், வயதில் பெரியவரான நீர் மரியாதையை எதிர் பார்க்கலாமா? என்று கேட்கும் விதத்தில் சகலமும் கசக்கும் அய்யா' என்று பதிலுரைத்தான். வேம்பில் நுனிப்பகுதி, அடிப்பகுதி என வேறுபாடு இன்றி அனைத்துப் பகுதிகளும் கசக்கும். கம்பரின் கருத்து முழுவதும் கசக்கும் விதத்தில் இருக்கிறது என்பதையே அவன் அவ்வாறு உணர்த்தினான்.

அதை உணர்ந்த கம்பர், சோழ நாட்டின் சிற்றூரான இந்த ஊரிலேயே ஒரு சிறுவன் இத்தனை கல்வியறிவு பெற்றிருந்தால், இங்குள்ள பெரிய வர்கள் எத்தனை கல்வியறிவு பெற்றிருப்பார்கள்.

அதனால் நாம் சோழ நாட்டிற்குச் செல்வதை விட, சேர நாட்டிற்குச் சென்று விடலாம் என்று முடிவெடுத்து சேரநாடு நோக்கி தன் பயணத்தைத் தொடங்கினார். அங்கு சென்று, சேர மன்னனை தன்னுடைய பாட்டாலும், புலமையாலும் கவர்ந் தார்.

# கவிக்கோ அப்துல் ரகுமான்

## அவர்களின் நினைவாக...

02.06.2017 அன்று காலை சிந்திப்பதை நிறுத்திக் கொண்ட கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் நினைவாக, அவருடைய கவிதை.

**நெல்லுக்கு உமி உண்டு**

திருமணம் ஆகாத ஆணும் பெண்ணும் தங்களுக்கு வரப்போகம் வாழ்க்கைத் துணைவனைப் பற்றி ஒரு வரைவிலக்கணம் வைத்திருக்கின்றனர்.


ஆண் தன் மனைவி இப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று எண்ணுகிறான். பெண்ணும் தன் கணவன் இப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று எண்ணுகிறாள். கற்பனைத் தூரிகையால் இவர்கள் வாழ்க்கைத் துணைவர்களை வரைகிறார்கள். கற்பனை வேறு யதார்த்தம் வேறு. கற்பனையால் குறையற்ற ஒன்றைக் காண முடியாது.

படைப்பு என்றாலே பரிபூரணமற்றது என்று பொருள். பரிபூரணம் இறைவனுக்கு உரியது. ஒருவன் ஒரு பரிபூரணமான பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்வேன் என்று முடிவு செய்தான். அதற்காக ஊரெல்லாம் தேடி அலைந்தான். எழுபது வயதில் அவன் நிராசையோடு சொந்த ஊருக்குத் திரும்பினான். “இத்தனை காலம் தேடியும் உனக்குப் பரிபூரணமான பெண், ஒருத்தி கூடவா கிடைக்கவில்லை?“ என்று அவன் நண்பன் கேட்டான்.

கிடைத்தாள் என்றான் அவன். பிறகு ஏன் அவளைத் திருமணம் செய்து கொள்ளவில்லை? என்று கேட்டான் நண்பன்.

அவள் ஒரு பரிபூரணக் கணவனைத் தேடிக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு என்னைப் பிடிக்கவில்லை என்றான் அவன்.





இது வெறும் நகைச்சுவைத் துணுக்கல்ல. இதில் ஆழ்ந்த அர்த்தங்கள் இருக்கின்றன. குறையற்ற ஒன்றை விரும்பும் நமக்கு அப்படி விரும்புவதற்கான தகுதி வேண்டும். நம்மிடம் குறைகளை வைத்துக் கொண்டு குறையற்றதுதான் எனக்கு வேண்டும் என்று கூறுவதில் நியாயமில்லை.

அவன் பரிபூரணமான பெண்ணைத் தேடினான். ஆனால் அவன் பரிபூரணமானவனாக இல்லை. அதனால் தான் அந்தப் பெண் அவனை நிராகரித்துவிட்டாள். இதில் இன்னோர் உண்மையும் இருக்கிறது. ஒரு வேளை அவன் தன்னைப் பரிபூரணமானவனாக நினைத்துக் கொண்டி ருக்கலாம். ஆனால் அந்தப் பெண்ணின் பார்வையில் அவன் பரிபூரணமானவனாக இல்லை.

அதாவது பரிபூரணம் பற்றிய அவன் வரைவிலக்கணம் வேறு, அவள் வரைவிலக்கணம் வேறு என்று தெரிகிறது. ஏன் இப்படி?

மனிதன் குறையுடையவன். குறையுடையவன் பரிபூரணம் பற்றிக் கற்பனை கூடச் செய்ய முடியாது. அதனால்தான் மனிதனால், இறைவனைப் பற்றிப் புரிந்துகொள்ள முடிவதில்லை. மனிதனு டைய பரிபூரணம் பற்றி கற்பனை கூடக் குறை யுடையதாகத்தான் இருக்கும்.

படைப்புகள் குறையுடையவை. இந்தப் படைப்புகளிலிருந்தே நாம் அறிவு பெறுகிறோம். எனவே நம் அறிவும் குறையுடையதாகவே இருக்கும். நாம் அறிவு பெறுவதற்கு உதவும் ஐம்பொறிகளும் குறையுடையவை. குறையுடைய தராசால் எப்படிச் சரியாக நிறுக்க முடியும்? நாம் குறையுடையவர்கள் என்பதை ஒப்புக் கொள்வதே ஞானத்தின் முதல்படி. நாம் குறையற்றவர்கள் என்று நினைப்பது அகங்காரம். நாம் குறையுள்ளவர்கள் என ஒத்துக் கொண்டால் அகங்காரம் அழிந்துவிடும்.

உலகில் எல்லாமே குறையுடையவையே என்பதை உணர்ந்து கொண்டவன் பிறரிடம் குறை கண்டு வெறுக்க மாட்டான். குறைக்காக வெறுப்ப தென்றால் உலகில் யாரும் மிஞ்ச மாட்டார்கள். எதுவும் மிஞ்சாது.


'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்பது பொன்மொழி.

குறைக்காக நம் சுற்றத்தாரை நாம் வெறுக்க ஆரம்பித்தால் ஒருவர்கூட மிஞ்சமாட்டார்கள். சுற்றத்தாரும் நம்மைக் குறைகாண ஆரம்பித்தால் நாம் தேறமாட்டோம். இந்த உலகில் நூற்றுக்கு நூறு நல்லவன் என்று யாரும் இல்லை. இருக்க முடியாது. அப்படி யாரையாவது நாம் நினைத்தால் ஒன்று அவருடைய குறை நமக்குத் தெரியவில்லை என்று பொருள். அல்லது அதைக் குறையாக நாம் கருத வில்லை என்று பொருள்.

நெல் பயனுடையது. ஆனால் அதற்கு உமி என்ற குறையுண்டு.

நீர் நமக்கு உதவுவது. ஆனால் அதற்கும் நுரை என்ற குறையுண்டு. பூ அழகானது என்கிறோம். ஆனால் அதற்கும் அழகற்ற புல்லிதழ்கள் உண்டு.

*நல்லார் எனத்தாம்*
*நனிவிரும்பிக் கொண்டாரை*
*அல்லார் எனினும்*
*அடக்கில் கொளல் வேண்டும்*
*நெல்லுக்கு உமியுண்டு*
*நீர்க்கு நுரையுண்டு*
*புல்லிதழ் பூவிற்கும் உண்டு*
*என்கிறது நாலடியார் (221)*
*சூரியனுக்கும் புள்ளிகள் உண்டு.*
*நிலாவுக்கும் கறையுண்டு.*
*கடலுக்கும் சுருக்கம் உண்டு.*
*பூமிக்கும் வழுக்கள் உண்டு.*
*நம்பிக்கையிலும் சந்தேகம் உண்டு.*
*காதலர்களிடமும் சச்சரவு உண்டு.*
*எல்லா வகையிலும் பரிபூரணமானது*
*எதுவும் இங்கு இல்லை.*



என்கிறார் டபிள்யூ. ஹெச். டேவிஸ். எனவே ஒவ்வொன்றையும் குறை கண்டு வெறுத்தால் நாம் வாழவே முடியாது.

உமிக்காக நெல்லை வெறுத்தால் பட்டினி கிடக்க வேண்டியதுதான்.

நுரைக்காக நீரை வெறுத்தால் தாகத்தால் சாக வேண்டியதுதான். புள்ளிகளுக்காகச் சூரியனை வெறுத்தால் நாம் ஒளிக்கு எங்கே போவது? பூமியின் குறைகளுக்காக அதை வெறுத்தால் எங்கே போய் வசிப்பது?

ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். குறை என்று நாம் நினைப்பது ஏதாவது ஒரு வகையில் பயன்படுவதாகவும் இருக்கலாம்.

நெல்லுக்கு உமி குறை என்று நினைக்கிறோம். ஆனால் அந்த உமிதான் அரிசி வளரக் கருப்பை யாக இருந்து உதவியது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. வேண்டியவர்களை நாம் விருப்பத்தோடு பார்க்கிறோம். அதனால் அவர்களுடைய குறைகள் நமக்குத் தெரியாமல் போய்விடுகின்றன. வேண்டா தவர்களை நாம் வெறுப்போடு பார்க்கிறோம். அதனால் அவர்களுடைய நிறைகள் நமக்குத் தெரியாமல் போய்விடுகின்றன. விருப்பு நிறைகளை மட்டுமே பார்க்கிறது. வெறுப்பு குறைகளை மட்டுமே பார்க்கிறது.

சிலர் எதை எடுத்தாலும் குறை சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். இது ஒருவகையான மனநோய்.

இலக்கியத்திலும் விமர்சகர்கள் என்று சிலர் உண்டு. அவனுக்கு எழுதத் தெரியாது. இவன் எழுது வது சரியில்லை என்று சொல்லிக் கொண்டேயி ருப்பார்கள்.

‘எழுத முடியாதவன், விமர்சகன் ஆகிவிடுகிறான்’ என்று சொல்வார்கள்.

‘பாவம் செய்யாதவன் விபச்சாரியின் மீது கல்லெறியட்டும்’ என்று சொன்ன இயேசுவின் வார்த்தையை எல்லோரும் நினைவில் வைப்பது நல்லது.

மற்றவர் மீது கல்லெறியும் முன் நாம் சுத்தமான வர்கள் தாமா என்று நினைத்துப் பார்க்க வேண்டும். குறைகளையே காண்பவன் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. அவன் மற்றவர்களுடைய மகிழ்ச்சியை யும் கெடுப்பான். நிறைகளையே காண்பவன் மகிழ்ச்சியாக இருப்பான். அவன் மற்றவர்களுக்கும் மகிழ்ச்சியைத் தருவான். ●



**(பல்லவி)**

மரணம்தாண்டிவாழும்வாழ்வேமனிதம்கண்டஉலகம்
மனமேமனமேஅறியும்பொழுதுதெரியும்உனக்குஉலகம்

**(அனுபல்லவி)**

விழிகளைமூடியவீரர்களே – உங்கள்
வீரம்தமிழரின்முகவரியே
விதைகளாய்ஆனீர்வீரர்களே – உங்கள்
ஈகம்ஈழத்தின்முதல்வரியே...

**(சரணம் 1)**

வானம்மடியுமாமாவீரம்மறையுமா
கனவுகள்தூங்குமாபோர்க்களங்கள்ஓயுமா
தாயகமொழியாய்தலைமுறைஒளியாய்வாழ்ந்தீர்வீரரே
தமிழரின்காலம்விடுதலைகாணவீழ்ந்தீர்வீரரே
இதயங்கள்நனையஇலட்சியமழையாய்பொழிந்தீர்வீரரே
இறக்கின்றபோதும்கருணையின்தாயாய்மலர்ந்தீர்வீரரே
தேடும்விழிதிசைஎழுத உங்கள் ஈகம் வானமே
தேசமுகம்நினைவுகளில்யுகமாய்நின்றுவாழுமே...

**(சரணம் 2)**

சூரியன்எரியுமாமாவீரம்சரியுமா
மலைகள்குனியுமாஈழமரபுகள்அழியுமா
பலமாய்ஆளப்பகையில்மோதிக்கரைந்தீர்வீரரே
பகலாய்இரவாய்தமிழர்வாழ்வில்கலந்தீர்வீரரே
விரையும்பொழுதும்தலைவன்நினைவில்உருகும்வீரரே
விடியும்ஈழமனதாய்ஆனீர்விடுதலைவீரரே
உயிர்எழுதும்கவிதைகளின்கருவாய்உங்களின்தியாகமே
உரிமைதரும்மூச்சினிலேமூளும்வீரயாகமே...

# அந்தப்புரத்து ராணியும் ஒட்டக்கூத்தரின் பாட்டும்



மக்களாகப் பிறந்த நாம், நம் குலப் பெருமையையும், பிறந்த பொன்னாட்டின் வரலாற்றையும், பேசும் தாய்மொழியின் வளத்தையும், சிறப்பையும் உணர்ந்து கொள்வது கடமையாகும். சிறந்து விளங்கிய பெருமக்களை அவர்கள் வாழ்ந்த வாழ்வு முறையினை அறிந்து வாழ்வது நமக்குப் பயன் தரும்.

வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர் செயங்கொண்டான்

விருத்தம் என்னும் ஒண்பாவிற் குயர்கம்பன் கோவையுலா அந்தாதிக் கொட்டக்கூத்தன்

கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள் வசைபாடக் காளமேகம்

பண்பாக வுயர்சந்தம் படிக்காச லாதொரு வர் பகரொணாதே

என்பது பழம்பாடல். ஒட்டக்கூத்தரின் புலமை சிறப்பை உயர்த்த பாடப்பட்டதே இப்பழம் பாடலாகும். ஒட்டக்கூத்தர், முதல் குலோத்துங்க சோழனின் மகன் விக்கிரம சோழனின் (கி.பி. 1120-1136) அவைக்களப் புலவராகத் திகழ்ந்தார். விக்கிரம சோழனின் மகன் 2ஆம் குலோத்துங்க சோழனுக்கும் (கி.பி.1126- 1150), அவரின் மகன் 2ஆம் ராஜராஜ னுக்கும் (கி.பி.1150 - 1163) அவைக்களப் புலவராக வும், தமிழ் ஆசிரியராகவும் திகழ்ந்தார் ஒட்டக் கூத்தர். மூன்று சோழ மன்னர்களுக்கு தொடர்ந்து அவைக் களப் புலவராகத் திகழ்ந்த பெருமை ஒட்டக் கூத்தரையே சாரும்.

இதனால் இவருக்கு கவுடப்புலவர், கவிராட் சசன், கவிச்சக்கரவர்த்தி, காளக்கவி, சர்வஞ் ஞகவி என பல்வேறு சிறப்புப் பெயர்கள் உண்டு. உலக இயல்பைக் கடந்து வர்ணனை களை அமைத்து செய்யுள் பாடியதால்

கவுடப்புலவர் என்றும், அக்காலத்தில் இருந்த புலவர் பெருமக்களுள் இவர் சிறந்து விளங்கியதால் கவிராட்சசன் என்றும், கவிச்சக்கரவர்த்தி என்றும் போற்றப்பட்டார்.

சோழ மன்னர்கள் அளித்த காளம் என்னும் விருது பெற்றதால் காளக்கவி என்றும் போற்றப் பட்டார். தமிழ்மொழி, வடமொழி ஆகிய இரண்டி லும் உள்ள நூல்களை நன்கு பயின்று, தாம் உணர்ந்த கருத்துகளை தெளிவாகப் புலப்படுத்தும் விதத்தில் பாடல்கள் இயற்றியதால் சர்வஞ்ஞகவி என்று அழைக்கப்படுகிறார்.

இவையெல்லாம் தக்கையா கப்பரணி என்னும் நூலாலும் அதன் உரையாலும், சோழ மண்டல சதகம் என்னும் நூலாலும் அறியப்படுகின்றது. ஒட்டக்கூத்தர் வாழ்ந்த காலம் கி.பி.12ஆம் நூற்றாண்டு. இவரின் இயற்பெயர் கூத்தர். இது நடராஜப்பெருமானின் பெயராகும்.

ஒட்டக் கூத்தினை ஆடியதால் இவர் ஒட்டக்கூத்தர் என அழைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இப்புலவர் பிறந்த ஊர் மலரி. இந்த ஊர் திருச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள திருவெறும்பூர் ஆகும். திருநாவுக் கரசர் இந்த ஊரினை திருஎரும்பியூர் என்றே அழைக்கிறார்.

நளவெண்பா பாடிய புகழேந்திப் புலவர், சேக்கிழார் பெருமான் ஆகியோர் இந்த காலகட்டத் தில்தான் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. கம்பரின் பிறந்த நாளையும் அவர் மறைந்த நாளையும் நினைவு கூர்ந்து இவர் பாடியுள்ளதால் கம்பர் இவர் காலத்திற்கு முந்தியவர் என்ற செய்தியை வரலாறு கூறுகின்றது.

ஒட்டக்கூத்தர் இயற்றியதாக இப்போதும் அறியப்படும் நூல்கள் விக்கிரமசோழனுலா, கலிங்கப்பரணி, அரும்பைத்தொள்ளாயிரம், குலோத் துங்க சோழன் பிள்ளைத்தமிழ், குலோத்துங்கன் சோழனுலா, ராஜராஜ சோழன் உலா, தக்கயாகப் பரணி, காங்கேயன் நாலாயிரக்கோவை போன்றவை. மேலும், இவர் சில செய்யுட்கள் பாடியதாக தமிழ் நாவலர் சரிதை போன்ற நூல்கள் குறிப்பிடுகின்றன.

ஒட்டக்கூத்தர் சிறந்த பண்பாளர். தன்னைப் போன்ற புலவர்களை பெரிதும் மதிப்பவர். புலவர் பொய்கையாரை 'மேதக்க பொய்கை, நல்லவன் பொய்கை' என்று பாராட்டுகிறார். ஜெயங்கொண் டாரை 'தேடற் கருங்கவி சக்கரவர்த்தி' என்றும், அவர் தம் படைப்பினை 'பாடற்பெரும் பரணி' என்றும் போற்றுகிறார். தம்மை ஆதரித்த பல்லவ ராயன் பல்லவனை 'பாடாதார் பசியனைய பசியினமே' என்று போற்றுகிறார். அதே போல் அகத்திய முனிவரை 'அறந்தவா மலயப்பொருப்பில் அகத்தியன், தமிழ்க்குன்றில் வாழும் சடாதாரி' என்றும் போற்றியுள்ளார்.

ஒட்டக்கூத்தர் காலத்துக்கு முன்பு தெய்வத்தின் மீது உலா பாடப்பட்டது. ஒட்டக்கூத்தரே முதன் முதலாக மன்னர் மீது உலா பாடினார். ஒட்டக் கூத்தர் பாட்டுக்கு இரட்டைத்தாழ்ப்பாள் என்பர்.

குலோத்துங்க சோழனின் மனைவி பாண்டிய நாட்டின் ராஜகுமாரி. அவளின் ஆசிரியர் நளவெண்பா காவியம் பாடிய புகழேந்திப்புலவர். இவர் சோழ நாட்டில் தங்கியிருந்த போது ஒட்டக் கூத்தரால் புகழேந்திப்புலவர் சிறை வைக்கப்பட் டார். இதனால் கோபம் கொண்ட அரசி, மன்னன் குலோத்துங்கன் அந்தப்புரம் வரும் சமயம் அறைக்குள் சென்று கதவை தாழிட்டுக் கொண் டார். அந்தக் காலத்தில் மகாராணி கோபம் கொண்டால் மன்னர்கள் தங்கள் அவைக்களப் புலவரை அனுப்பி சமாதானம் செய்வது வழக்கம்.

அதன்படி குலோத்துங்க சோழன் தன் அவைக் களப்புலவரும், குருவுமான ஒட்டக்கூத்தரை சமாதானம் செய்விக்க வேண்டி ராணியின் அந்தப்புரத்திற்கு அனுப்பினார். புலவரும் ராணியின் அறைக்கு முன்னால் நின்று கொண்டு பாடல்கள் மூலம் சமாதானப்படுத்த முயன்றார்.

ஒட்டக் கூத்தரின் பாடலைக் கேட்ட ராணி மேலும் கோபமுற்று கதவை தாழிட்டுக் கொண்டாள். ஆதலாலேயே ஒட்டக்கூத்தர் பாட்டிற்கு இரட்டைத்தாழ்ப்பாள் என்பர். புகழேந்திப்புலவர் சிறையில் இருப்பதுதான் ராணியின் கோபத்திற்கு காரணம் என்பதை உணர்ந்த மன்னர் புலவரை உடனே விடுதலை செய்தார்.

**மணி. மாறன்,**

*சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்.*

# சமூகநீதி, மதச்சார்பின்மை இவற்றைப் புறந்தள்ளி இந்துத்துவாவை நிலை நிறுத்தத் துடிக்கிறது மத்திய பி. ஜே. பி. ஆட்சி!

## திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை




சமூகநீதி, மதச்சார்பின்மை இவற்றைப் புறந்தள்ளி இந்துத்துவாவை நிலை நிறுத்தத் துடிக்கிறது மத்திய பி. ஜே. பி. ஆட்சி!

அபாயகரமான இந்த பி.ஜேபி ஆட்சியை முறியடிக்க எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்கும் சோனியா ஒத்துழைக்கவும் வேண்டும்.

சமூகநீதி, மதச்சார்பின்மை இவற்றைப் புறந்தள்ளி இந்துத்துவாவை ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி நிலை நிறுத்தவும், அடுத்த தேர்தலிலும் வெற்றி பெறத் திட்டங்களை தீட்டும் மத்தி மதவாத ஆட்சியை வீழ்த்திட காங்கிரசுத் தலைவர் சோனியா காந்தி அவர்கள் எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்கும் சிறப்பான முயற்சியை மேற்கொண்டுள்ளார். அவர் முயற்சி வெற்றி பெற எதிர்க்கட்சிகள் இணக்க மான முறையில் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என்று திராவிடர் கழகத்தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள முக்கிய அறிக்கை வருமாறு.

ஆர். எஸ். எஸ். அமைப்பின் அரசியல் வடிவமான பாஜக தலைமையிலான மத்தியில் ஆளும் பிரதமர் மோடி அரசு பல்வேறு தந்திரங்களையும், உத்திகளையும், வியூகங்களையும், வித்தைகளையும், அவ்வப்போது தனது நிறங்களையும், குரல்களையும் மாற்றி மாற்றி, எளிதில் எவரும் ஏமாந்துவிடக்கூடிய பல்வேறு நடைமுறைகளைக் கையாண்டு தேர்தல்களில் வெற்றி பெறுவதையே தனது இலக்காகக் கொண்டு இயங்கி வருகிறது.

அதனிடம் அதிகார பலம், பண பலம், வன்முறை பலம், பத்திரிகை பலம், திரிபுவாத திருகுதாள பலம் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்று இப்போதே

2019 பொதுத் தேர்தலில் மீண்டும் தங்களது ஆட்சி அமைய திட்டமிட்டு பணியாற்றி வருகின்றது.

பா ஜ க வெற்றிக்குப் பின்புலம் எது? பா ஜ க வின் வெற்றிக்குப் பின்புலம் அதன் பலமோ, கொள்கைகளோ அல்ல, மாறாக, எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையின்மை, பலவீனம்தான்! மக்களின் அறியாமையும் நம் இளைஞர்கள் ஏமாளித்தனமும் தான்!

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு! ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு!

என்பது இந்தியாவிலும், மாநிலங்களிலும் உள்ள எதிர்க்கட்சிகளுக்கு மிகவும் பொருந்தக் கூடிய ஒன்றாகும்.

அரசமைப்புச் சட்டத்தின்மீது பிரமாணம் எடுத்துள்ள நிலையிலும், துணிந்து அரசியல் சட்ட துஷ்பிரயோகத்தைச் செய்யக்கூடிய ஆட்சியாகவும், கட்சியாகவும் இன்றைய பா ஜ க ஆட்சி, கட்சி இரண்டும் உள்ளன.

ஒருபுறம், ஹிந்தித் திணிப்பு தென்னாட்டு மக்களின் மீது, மறுபுறம் கர்நாடகத்தில் நடை பெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் வாக்கு வங்கியை வளைத்துப் போட உச்சநீதின்றம் காவிரி நதிநீர் ஆணையம் அமைக்க தீர்ப்பு தந்ததும், அந்நீதிமன்றத்தில் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு விட்ட அடுத்த சில நாள்களில் அப்படியே பகிரங்க தலைகீழ் பல்டி அடித்தது எதைக் காட்டுகிறது.

திடீரென்று பசவண்ணா பஜனை, தமிழ் மொழியின் மீது அளவில்லா காதல் பிரதமர் மோடியின் பேச்சில் வழிந்தோடிவரும் வஞ்சக இரட்டைக்குரல் இரட்டைவேடம் இல்லை?

இப்படி அடுக்கடுக்காய் எத்தனையையோ சுட்ட முடியும்.

இந்நிலையில், ஆளும் கட்சியின் அபாயகரமான ஹிந்துத்துவ கொள்கைகளான பசுப் பாதுகாப்பு, சிறுபான்மையினருக்கு எதிரான பல நளினமான நடவடிக்கைகள் போன்றவைகளுக்கு இப்போது எதிர்த்து முற்றுப்புள்ளி வைக்கத் தவறினால், நாட்டின் ஜனநாயகமும், அரசியல் சட்டமும் கேலிக் கூத்தாகிவிடும்! அனைத்து எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைப்புத் தேவை.

அடுத்த குடியரசுத் தலைவர் தேர்தல் ஜூலையில் நடைபெறவிருக்கிறது. இந்நிலையில், நாட்டில் உண்மைப் பெரும்பான்மை பலம் கொண்ட மக் களின் விருப்பங்களை நிறைவேற்ற மதச்சார் பின்மை, மாநில உரிமைகள், சமூக நீதி முதலிய கருத்துச் சுதந்திரம் உண்ணும் எண்ணும் சுதந்திரம் உள்பட பலவற்றைக் காப்பாற்றிட அனைத்து எதிர்க்கட்சியினரும் ஓரணியில் திரண்டால், ஆர் எஸ் எஸ், பாஜகவின் மதவாத அரசின், சமூகநீதிக் கான சதிராட்டம், கூட்டாட்சி முறைக்கு வேட்டு வைக்கும் ஒன்றை ஆட்சியை மறைமுகமாகத் திணிப்பது போன்ற சூழ்ச்சிகளை மக்கள் விரோத நடவடிக்கைகளை முறியடிக்க முடியும்!

இதற்கு முன் காணப்பட்ட ஒற்றுமையின் மையை எதிர்க்கட்சிகள் கைவிட்டு சற்று தாராள மான அணுகுமுறையில், தீ எரியும்போது, அணைப் போர் எப்படி ஒற்றுமையுடன் நின்று தீயை அணைப்பார்களோ அப்படி ஒன்று பட்டு ஓரணி யில் திரள வேண்டிய சரியான தருணம் இது.

எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்கும் சோனியா அவர்களின் சிறப்பான முயற்சி!

தி எகனாமிக் டைம்ஸ் நாளேட்டில் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திருமதி, சோனியா காந்தி அவர்கள் இதற்கான கடும முயற்சியை மேற்கொண்டு அத்துணை அரசியல் எதிர்கட்சி களை ஒரே அணியில் கொண்டுவர குடியரசுத் தலைவர் தேர்தலை முன்னிட்டு, தீவிர முயற்சியில் இறங்கியுள்ளார் என்பது நம்பிக்கை ஒளியாகும். இது வரவேற்றுப் பாராட்டத்தக்க சிறப்பான முயற்சியாகும்.

உத்தரப்பிரதேசத்தில் முலாயம்சிங்கின் சமாஜ்வாடியும், செல்வி மாயாவதியின் பகுஜன் கட்சியும் (ஏற்கெனவே பீகார் ஒற்றுமை சிறந்த பலனையும் தந்துள்ளது) தெற்கே ஆந்திரா, தெலங்கானா, தமிழ்நாட்டில் திமுக, கேரளாவில் இரண்டு கம்யூனிஸ்டுகள், சோஷியலிஸ்டுகளான சரத்யாதவ், நிதிஷ்குமார், லாலுபிரசாத் இப்படி அனைத்து எதிர்க்கட்சிகளை ஓர் அணியில் திரள முயற்சிகளை எடுத்து வருவதாக வரும் செய்திகள் காலத்தே மேற்கொள்ளப்படும் நல்முயற்சிகள்!


பொது எதிரிதான் முக்கியம். பொதுஎதிரி மதவாதம், மாநிலங்களின் கூட்டாட்சி முறைப் பறிப்பு சமூகநிதி மதச்சார்பினைப் பறிப்பு, ஜன நாயக வழிமுறைகளைத் தடுப்பது இவைகள்தான் பிரதமர் மோடியின் தலைமையில் ஆர் எஸ் எஸ் சால் கண்காணிக்கப்பட்டு நடத்தப்பட்டு வரும் ஆபத்தான போக்குகள்!

இப்போது இன்றேல் எப்போதும் கிட்டாது என்ற கருத்து மொழிக்கேற்ப, பாஜகவினர் அரசியல் நடத்துகின்றனர்! வெற்றிக்காக எதையும் இழக்க அவர்கள் ஆயத்தமாகிவிட்டனர். இந்நிலையில், சோனியாகாந்தி அம்மையாரின் முயற்சி முழு வெற்றியாக நம் வாழ்த்துகள்! இது காலத்தின் கட்டாயம்.

***கி. வீரமணி,*** *தலைவர், திராவிடர் கழகம்,*

# தமிழர்களின் பண்பாடு கீழடி

தமிழர்களின் உயர்நிலைப் பண்பாடு என்பது காலத்தால் கணக்கிட முடியாதது. உலகத்தின் முதல் உயர்நிலைப் பண்பாட்டுச் சமூகம் நமது தமிழ்ச்சமூகம் என்பதுதான் உலகத்தில் மறுக்க முடியாத உண்மை.



மதுரைக்கு அருகிலுள்ள கீழடியில் நமது உயர்நிலைப் பண்பாட்டுக்கு ஆதாரமாக பல தரவுகள் கிடைத்திருக் கிறன்றன. அவற்றை எல்லாம் மறைக்கும் வேலையிலும், தொடர்ந்து தமிழர் உயர்நிலைப் பண்பாட்டை உணர்த்து கின்ற ஆதாரங்களை உலகுக்கு காட்டக்கூடாது என்ற நோக்கிலும் நடுவண் பாசக அரசு செயல்படுவதாக தமிழறி ஞர்கள் கருதுகிறார்கள்.

கீழடி அகழ்வாய்வில் இது வரை 48 சதுரக் குழிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. இதில் உறைகிணறுகள், செங்கற் சுவர்கள், கூரைஓடுகள், மண்பாண்டங்கள், மிளிர்கல், பவளம், பளிங்கு, மணிகள், பச்சை, மஞ்சள், நீல நிறக்காண் ணாடி மணிகள், அணிகலன்கள், யானைத் தந்தத்தினாலான தாயக்கட்டைகள், தாமிரத்தாலான கண்மை தீட்டும் கம்பி, இரும்பாலான அம்பு முனைகள், எழுத்தாணி, சுடுமண் முத்திரைக் கட்டைகள், சுடுமண் பொம்மைகள், எலும்புக் கருவிகள், இரும்புவேல், தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட பானையோடுகள் என பல்வேறு தொல்லெச்சங்கள் அகழ்ந்த தெடுக்கப்பட்டுள்ளன.



தமிழ் மாநில தேசிய லீக் பொதுச்செயலாளர் திரு. திருப்பூர் அல்தாப் அவர்களுடன் முற்றம் ஆசிரியர் விசவனூர். வே. தளபதி அவர்கள்.

# ஆழ்கடல் உயிரினங்களுக்கு ஆபத்து

பேரா. கே.ராஜு

கடல் உயிரினங்களுக்கு ஆபத்து பல வடிவங்களில் பல திசைகளிலிருந்து வருவதுண்டு. சுற்றுப் புறங்களில் பிளாஸ்டிக் பொருட்கள் சேருவதால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. அது வன உயிரினங்கள், அவற்றின் இருப்பிடங்கள் மற்றும் மனிதர்களுக்கு மோசமான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. பிளாஸ்டிக்கினால் ஏற்படும் பிரச்சினையே அதன் மக்காத தன்மைதான். கால காலத்துக்கு அழியாமல் இருந்து சுற்றுப்புறத்துக்கு சேதாரத்தை ஏற்படுத்துவதில் அதற்கு நிகரில்லை. இதுவரையில் அதன் கொடுங்கரங்கள் ஆறுகள், நீர்நிலைகள், கடற்கரை யோரப் பகுதிகள் வரையில் மட்டுமே நீளும் என நினைத்திருந்தோம். ஆனால் பிரிட்டனில் உள்ள பிரிஸ்டல், ஆக்ஸ்போர்டு ஆகிய இரு இடங்களில் உள்ள ஆய்வாளர்கள் நுண்ணிய பிளாஸ்டிக் வடிவில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகள் கடல் ஆழத்தில் உள்ள உயிரினங்களுக்கும் ஆபத்தை விளைவிக்கக் கூடியவை என்று கண்டு பிடித்துள்ளனர்.

அழகு சாதனங்களிலும் பற்பசை போன்ற சுத்தப்படுத்தும் பொருட்களிலும் உள்ள ஐந்து மிமீ. நீளத்திற்குக் குறைவான நுண்ணிய பிளாஸ்டிக் நார்கள், பிளாஸ்டிக் சிறுமணிகள் (microbeads) எல்லாமே நுண்ணிய பிளாஸ்டிக் பொருட்கள் (microplastics) என அழைக்கப்படுகின்றன. செயற்கை இழைகளினால் ஆன ஆடைகளைத் துவைக்கும் போது பாலியெஸ்டர், நைலான், அக்கிரிலிக் அமிலக் கழிவுகள் போன்ற நுண்ணிய பிளாஸ்டிக் பொருட்கள் கடலுக்குள் நுழைந்துவிடுகின்றன. மத்திய அட்லாண்டிக், தென்மேற்கு இந்துமா கடல் ஆகிய இரு இடங்களில் சோதனை மேற்கொண்ட ஆய்வாளர்கள் கடல் ஆழத்தில் செல்லும் (தொலை விலிருந்து இயக்கக்கூடிய) வாகனத்தைப் பயன் படுத்தி கடல் உயிரிகளை அவர்கள் சேகரித்தனர்.



300லிருந்து 1800 மீட்டர் ஆழத்தில் உள்ள ஹெர் மிட் நண்டுகள், கல்லிறால்கள் (lobsters), கடல் வெள்ளரிகள் போன்ற பல்வேறு கடல் உயிரிகளில் பிளாஸ்டிக் நுண்நார்கள் இருப்பதை தங்களது ஆய்வில் கண்டுபிடித்தனர்.

இவ்வளவு ஆழத்தில் இருக்கும் உயிரிகள் நுண்பிளாஸ்டிக் பொருட்களை உட்கொள்ளக் கூடியவை என்பதற்கான முதல் ஆதாரம் இது. தரையில் உள்ள மாசுபடுத்தும் பொருட்களிலி லிருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்தில் உள்ள கடல் ஆழத்தில் இத்தகைய நுண்பிளாஸ்டிக் பொருட்களைக் கண்டுபிடிக்க முடியும் என்பது நமக்கு ஓர் எச்சரிக்கை மணி என்கிறார் இந்த ஆய்வுக்குழுவின் தலைவர் மிஷேல் டேலர்.

கடலின் மேலடுக்குகளிலிருந்து கடல் ஆழத்திற் குப் பொழியப்படும் உயிரிப் பொருள் கடல் பனி (marine snow) என அழைக்கப்படுகிறது. கடல் ஆழத்தில் உள்ள உயிரினங்களுக்கு இது உணவா கிறது. நுண்பிளாஸ்டிக் பொருட்கள் கடல் பனி அளவே இருக்கும். துணி துவைக்கும் கருவியை உபயோகிக்கும் ஒவ்வொரு முறையும் 7லட்சம் நுண்நார்கள் கழிவு நீரில் செலுத்தப்படும் என பிரிட்டனில் உள்ள பிளைமௌத் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் அண்மையில் செய்த ஆய்வு தெரிவிக்கிறது.

இந்த நுண்நார்களில் பெரும்பகுதி சுற்றுப்புறத் தில் கலந்துவிடும். பிளாஸ்டிக் பொருட்கள் நமக்கு பல வழிகளில் அன்றாடம் பயன்படுகின்றன. ஆனால் கடல் ஆழத்தில் உள்ள நீரில் நுண் பிளாஸ்டிக் மாசுபாடு அதிகரித்துக் கொண்டே வந்தால் அது கடல்வாழ் உயிரினங்களுக்குப் பெரும் கேடு விளைவிப்பதில் போய் முடியும். மேம்பட்ட கழிவுப் பொருள் மேலாண்மை நடைமுறைகள் மூலம் கடல் சார்ந்த வாழ்விடங்களில் பிளாஸ்டிக், நுண்பிளாஸ்டிக் கழிவுகள் சேராமல் தடுப்பது மிகமிக முக்கியமானது.

அழகு சாதனங்களிலும் சுத்தப்படுத்தும் கருவிகளிலும் பிளாஸ்டிக் சிறுமணிகள் பதிப்பது 2017 இறுதிக்குள் தடை செய்யப்படும் என பிரிட்டன் அண்மையில் அறிவித்திருக்கிறது.

பிளாஸ்டிக்கினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டு வரும் சேதாரங்கள் பற்றி மக்கள் அவையின் தணிக்கைக் குழு சமர்ப்பித்த அறிக்கையைத் தொடர்ந்தே பிரிட்டிஷ் அரசு இந்த முடிவை எடுத்திருக்கிறது. பிளாஸ்டிக் சிறுமணிகள் கொண்ட பற்பசையையும் சுத்தப்படுத்தும் பொருட் களையும் தடை செய்யும் சட்டத்தை முன்னாள் அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா கடந்த ஆண்டு பிறப்பித்தார். இந்திய அரசும் இப்பிரச்சினையைக் கவனத்தில் கொண்டு கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாப்பதற்குரிய சட்டங்களைக் கொணருவது உடனடித் தேவை.



# மண்பானை மகத்துவம்

மின்சாரம் இல்லாமலே குளிர்ந்த நீரை நமக்கு உருவாக்கித் தரும் வரலாற்றுப் பெருமைமிக்க பாத்திரம் மண்பானை. முற்காலத்தில் இந்தப் பானை பலவழிகளில் வாழ்வில் பயன்பட்டு வந்தது. தண்ணீர் ஊற்றிவைக்கவும், தானியங்களை போட்டுவைக்கவும், ஆண்டுச் செலவுக்கான செருவாட்டு உண்டியலாகவும் நல்லெண்ணெய் விளக்கெண்ணெய் போன்றவை ஊற்றிவைக்க, மிளகாய், புளி, உப்பு போன்றவை போட்டு வைக்க, இப்படி சொல்லிக் கொண்டே போகலாம் பானையின் பயன்பாட்டை.

அந்தக் காலத்தில் பணக்காரர்கள் பொன்னையும் பொருளையும் பானைகளில் போட்டு நிலத்தில் புதைத்து வைத்ததும் உண்டு. இன்றும் புதையல் களாக பல இடங்களில் கிடைக்கிறது. நம் முன்னோர்களின் அடையா ளத்தை, வாழ்வியல் வரலாற்றை பானைகள் பறை சாற்றுகிறது. இறந்தவர்களைப் புதைக்க சவப்பெட்டிகளாகவும் பயன்படுத்தினார்கள். பானை ஓடுகள் வழியாக அடையாளப் பதிவுகளையும் எழுதி வைத்துள்ளார்கள் அதைத் தான் புதைபொருள் ஆராய்ச்சி யாளர்கள் **முதுமக்கள் தாளிகள்** என்று சொல்லி நமக்கு நமது வரலாற்றை அடையாளப் படுத்து கின்றனர்.

பானையில் சமைக்கும் சோறும் பானையில் ஊற்றி வைக்கும் தண்ணீரும் தனிச் சுவையானது., அந்தக் காலத்தில் வழிப்போக்கர் களுக்குக்கூட தண்ணீர்ப் பந்தல் கள் வைத்துப் மண்பானை களில் குளிர்ந்த தண்ணீர் இலவசமாக வழங் கப்பட்டது.

திருவிழாக் காலங்களில் நீர்மோரும் பானகமும் மண் பானைகளில் வைத்து வழங்கப் பட்டன.



கவிபா

ஆதியிலிருந்து இன்று வரை கள்ளு ஊற்றி வைக்க மண்பானைகள்தான் புழக்கத்தில் உள்ளன. அதுதான் இன்றுவரை நீடிக்கிறது. மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்திருந்த மண்பானை இன்று புழக்கத்தில் இருந்து மறைந்து விட்டதென்பது வேதனைக் குரியது.

நகரங்களில் குடிதண்ணீரை மண்பானைகளில் ஊற்றிவைத்துக் குடிப்பது விரும்பப்பட்டாலும் அதற்கேற்ற சுத்தமான குடிநீர் அரிதாகி வருவதால் நவீன சாதனங்களின்மூலம் சுத்திகரிக்கப்படும் தண்ணீரின் பயன்பாடு அதிகரித்து வருகிறது.

அதன் காரணமாக பிளாஸ்டிக் பாட்டில்கள் பயன்பாட்டினால் சுற்றுச் சூழல் பிரச்சினை அதிகரித்து வருவதோடு குடிதண்ணீர்கூட வர்த்தகப் பொருளாகி விற்பனைக்கு வந்துவிட்டதுதான் சோகமான விஷயம்!

நவீன வாழ்க்கை என்ற பெயரால் நாம் இழந்து வரும் எண்ணற்றவைகளில் வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க இந்த மண்பானைகளும் அடங்கும்!

மண்பானை ஒரு மிகச் சிறந்த நீரை சுத்திகரிக்கும் கருவி. இது இந்த தலைமுறையில் எத்தனைபேருக்கு தெரியும். மண் பானையில் குடிதண்ணீரை ஊற்றி வைத்து இரண்டு மணி நேரம் முதல் ஐந்து மணி நேரம் வைத்திருந்தால் அந்த தண்ணீரில் உள்ள அனைத்து கெட்ட பொருள்களையும் மண் பானை உறிஞ்சிக் கொண்டு அந்த நீருக்கு மண் சக்தியை அளிக்கிறது. எனவே உலகத்திலேயே மிகச் சிறந்த WATER FILTER மண் பானைதான் மறுக்கமுடியுமா?

எனவே தண்ணீரை மண் பானையில் வைத்துக் குடித்தால் கெட்ட பொருள்களும் அழியும். மண் சக்தியும் கிடைக்கும், பிராண சக்தி அதிகரிக்கும். குளிர்ச்சிக்காக பிரிட்ஜில் வைத்திருக்கும் தண்ணீரை எடுத்து 15 நிமிடங்களுக்கு பின்பே குடிக்க வேண்டும். ஆனால் மண்பானை தண்ணீர் இயற்கையானது. அந்த தண்ணீரை தாகம் எடுக்கும் போதெல்லாம் உடனே அருந்தலாம். பிரிட்ஜ் தண்ணீரை காட்டிலும் மண்பானை தண்ணீரே மிக சிறந்தது. மேலும் வெட்டிவேர், எலுமிச்சை, புதினாவையும் தண்ணீரில் சேர்த்தால் இன்னும் குளிர்ச்சியாக இருக்கும். மண்பானைகளை வைப்பதற்கு முன் கீழே மணல் வைத்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

மேலை நாடுகளில் நாகரிகம் தொடங்கிய காலத்திலேயே மண்பானை பற்றி யோசித்திருக்கிறார். ஆனால் இது பற்றிய அறிவியல் உண்மையை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. உடனே இதனை 'மந்திரப் பானைகள்' என்று சொல்லி வியாபாரம் செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

இதில் வளர்ந்த நாடு, தாழ்ந்த நாடு என்ற வித்தியாசம் இல்லை; படித்தவர்கள் படிக்காதவர்கள் என்ற வேறுபாடும் இல்லை. மூட நம்பிக்கைக்கு பெயர் போன சில ஆப்ரிக்க நாடுகளிலும், ஸ்பெயின் போன்ற முன்னேறிய ஐரோப்பிய நாடுகளிலும், மண்பானைகளை மந்திரப்பானைகள் என்று சொல்லி 'கல்லா' கட்டினார்கள்.அது ஒரு பக்கம் இருக்கட்டும்... வரலாற்றைத் தாண்டி அறிவியலுக்கு நாம் வருவோம்!

மண்பானையின் பெரிய ஆச்சரியம் என்னவென்றால், வெளியில் வெயில் பட்டையைக் கிளப்பும்போது மண்பானை தன்னுள் இருக்கிற நீரை அதிக அளவு குளிரச் செய்யும். வெளிப்புறத்தில் வெயில் குறைவாக இருந்தால் மண்பானையில் உள்ள நீரும் குறைந்த அளவே குளிர்ந்து இருக்கும்.

கடும் கோடையில் உடலுக்கு இதமாக, ஒரு மண்பானை நீரை நன்றாகக் குளிரச் செய்து கொடுக்கிறது என்றால் அது எவ்வளவு பெரிய வரப்பிரசாதம்!? மண்பானை சீக்ரெட்டின் எனர்ஜி ரொம்பவே சிம்பிள்தான்.

மண்பானைகளில் நுண்துளைகள் நிறையவே இருக்கின்றன. நீர் வைக்கப்பட்டிருக்கும் மண் பானைகளின் வெளியே முத்து முத்தாய் வியர்த்திருப்பது போன்று நீர்த்திவலைகள் இருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம்.

மண்பானையில் உள்ள சிறிய நுண் துளைகள் வழியேதான் இப்படி நீர் கசிகிறது. இந்த நீர் தொடர்ந்து ஆவியாகிக் கொண்டே இருக்கிறது. இப்படி பானையின் வெப்பமும், பானையின் உள்ளே இருக்கும் நீரில் உள்ள வெப்பமும் தொடர்ந்து ஆவியாதல் மூலம் வெளியேற்றப்படுகிறது. எனவே நீர் குளிர்ந்த நிலையிலேயே இருக்கிறது.

வெளிப்புறக் காற்றின் தன்மையைப் பொறுத்தும், நீர் குளிர்ச்சி அடையும் தன்மை மாறும். பானை யைச் சுற்றிலும், அதாவது வெளிப்புற வெப்பம் அதிகமாக இருந்தால், அதிக வெப்பத்தின் காரணமாக நீர் ஆவியாவதும் அதிக அளவில் நடைபெறுகிறது. ஆவியாதல் மூலமாக வெப்பம் வெளியேற்றப்படுவதால் பானைக்குள் இருக்கும் நீர் மிகவும் குளிர்ச்சியாக மாறுகிறது.

பனிக் காலத்திலும், மேலைக்காற்று வீசும் காலத்திலும் காற்றில் 'ஈரப்பதம்' அதிகம் கலந்து இருக்கும். காற்று ஜில்லென்று வீசும். காற்றின் ஈரப்பதம் அதிகரித்திருக்கும் இந்தப் பருவ காலத்தில் நீர் ஆவியாகும் அளவு குறைகிறது. எனவே பானையில் இருக்கும் நீரும் குறைந்த அளவே குளிர்ச்சி அடைகிறது.

ஆனால், இதற்காக மண்பானையில் நீண்ட நேரம் நீரை வைத்து குளிரச் செய்தால், அது அப்படியே ஐஸ் கட்டி ஆகிவிடும் என்றெல்லாம் எதிர்பார்க்க முடியாது. நவீன கால ஃபிரிட்ஜ்கள் போல ஒரேயடியாகப் பற்களை நடுநடுங்கச் செய்யும் அளவுக்கு மண்பானை தண்ணீரை குளிர்விக்காது.

ஒரு மண்பானை எந்த அளவுக்கு நீரை குளிர்விக்கும் என்று கேட்டால், அறை வெப்பநிலையைவிட வெறும் 5 டிகிரி செல்சியஸ் குறையும் அளவுக்குத்தான் குளிர்விக்கும். வெளிப் புறத்தில் வெப்பம் 30 டிகிரி செல்சியஸ் என்றால் மண்பானையில் உள்ள நீரின் வெப்பநிலை 25 டிகிரி செல்சியஸ் அளவுக்கு இருக்கும்.

இப்போது புரிகிறதா! பண்டைக்கால மக்கள் நம்பியதுபோல, மந்திரம் எதுவும் மண்பானையில் இல்லை.

**பானை வகைகள்**

நம் தமிழகத்துள் வழங்கப்பெற்ற,வழங்கப்பெறும் பானை வகையுள் சில.


அஃகப் பானை – தவசம்( தானியம்) சேர்த்து வைக்கப் பயன்பெறும் பானை (குதிர், குறுக்கை) அஃகம்– தவசம்

அஃகுப் பானை – வாயகன்றும் அடிப்புறம் சுருங்கியும் தோன்றும் பானை.

அகட்டுப் பானை – நடுவிடம் பருத்த பானை

அடிசிற் பானை – சோறு ஆக்குவதற்குப் பயன் பெறும் பானை.

அடுக்குப் பானை – நிமிர்வு முறையில் அல்லது கவிழ்வு முறையிலாக ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பெறும் பானை வரிசை. திருமணச் சடங்கு மேடையில் அடுக்கப்பெறும் ஏழுபானை வரிசை.



அரசாணிப்பானை திருமணச் சடங்கு மேடையில் நாட்டப் பெறும் அரசாணிக் காலுக்குப் பக்கத்தில் வைக்கப் பெறும் மங்கலப் பானை.

உசும்பிய பானை – உயரம் மிகுந்த பானை.

உறிப் பானை – உறியில் வைத்தற்கு ஏற்ற பானை

எஃகுப் பானை – இரும்பு உருக்கி எடுக்கவுதவும் பானை

எழுத்துப் பானை – எழுத்துகள் வரையப் பெற்ற பானை

எழுப்புப் பானை – உயரம் வாய்ந்த பானை

ஒறுவாயப் பானை – விளிம்பு சிதைந்த பானை

ஓதப் பானை – ஈரப் பானை

ஓர்மப் பானை – திண்ணிய பானை, தட்டினால் நன்கு ஒலியெழும்பும் பானை

ஓரிப் பானை – தனிப் பானை, ஒல்லியான பானை

ஓவியப் பானை – ஓவியம் வரையப் பெற்ற பானை, வண்ணம் தீட்டப்பட்ட பானை

கஞ்சிப் பானை – கஞ்சியை வடிதத்ற்குப் பயன் பெறும் அகன்ற வாயுடைய பானை

கட்டப் பானை – அடிப்பகுதி வனையப்படாத பானை

கட்டுப் பானை – மிதவை அமைத்தற்கென அம்மிதவையின் ஓரத்தில் கட்டப்பெறும் பானை)

கதிர்ப் பானை – புதிய நெற்கதிர்களையும். நெல்மணிகளையும் வைத்தற்குப் பயன்பெறும் பானை

கரகப் பானை – கரவப்பானை – நீர்க்கரகம்

கரிப்பானை – கரி பிடித்த பானை

கருப்புப் பானை – முழுவதுமாகக் கருநிளம் வாய்ந்த பானை

கருப்பு – சிவப்பு பானை – உள்ளே கருநிறமும் வெளியே செந்நிறமும் வாய்ந்த பானை

கலசப் பானை – கலயம், கலசம், கலம், நீர்க்கலம்

கழுநீர்ப் பானை – அரிசி முதலிய கூலங்களைக் கழுவிய நீரை ஊற்றி வைத்தற்குப் பயன்பெறும் பானை ( பேச்சு வழக்கில் கழுனிப் பானை எனப்படுகின்றது )

காடிப் பானை – கழுநீர்ப் பானை

காதுப் பானை – விளிம்பில் பிடியமைத்து உருவாக்கப் பெறும் பானை

குண்டுப் பானை – உருண்ட வடிவத்தில் தோன்றும் பானை

குறைப் பானை – அடிப்பகுதியில்லாத பானை, அடியிலி (பேச்சு வழக்கில் குறுப்பானை என்னப் பெறுகின்றது )

கூடைப் பானை – கூடை வடிவில் உருவாக்கப் பெறும் பானை

கூர்முனை பானை – அடிப்புறம் கூர்முனை அமையும் படியாக உருவாக்கப் பெற்ற பானை

கூர்ப் பானை – கூர் முனைப் பானை

கூழ்ப் பானை – கூழ் காய்ச்சுதற்கெனப் பயன்படுத்தப் பெறும் பானை

கோளப் பானை – உருண்டு திரண்ட பானை

சருவப் பானை – மேற்புறம் அகற்சியாகவும் – கீழ்ப்புறம் சரிவாகவும் சுருங்கியும் ஆக உருவாக்கப் பெற்ற பானை.

சவப்பானை – சவம் இடுதற்கேற்ப உருவாக்கப் பெற்ற பெரிய பானை, ஈமத்தாழி

சவலைப் பானை – நன்கு வேகாத பானை, மெல்லிய பானை

சன்னப் பானை – மெல்லிய பானை, கனமில்லாத பானை

சாம்பல் பானை – கையால் செய்யப் பெற்ற பானை

சொண்டுப் பானை – கனத்த விளிம்புடைய பானை

சோற்றுப் பானை – சோறாக்குவதற்குப் பயன்பெறும் பானை

சில்லுப் பானை – மிகச் சிறிய பானை

சின்ன பானை – சிறிய பானை

தவலைப் பானை – சிறிய வகைப் பானை( நீர் சேமிக்க உதவுவது )

திடமப் பானை – பெரிய பானை (திடுமுப் பானை)

திம்மப் பானை – பெரும்பானை (திம்மம் – பருமம்)

துந்திப் பானை – தொந்தியுறுப்புப் போன்று அடிப்பாகம் மிகவுருண்டு திரண்ட தோற்றம் அமைந்த பானை

தொண்ணைப் பானை – குழிவார்ந்த பானை

தோரணப் பானை – கழுத்துப் பாகத்தைச் சுற்றிலும் தோரணவடிவில் உருவெட்டப் பெற்ற பானை

தோள் பானை – தோளில் ( சுவற்பகுதியில் ) தொங்கவிட்டுப் பயன்படுத்துதற்கேற்றவாறு உருவமைந்த பானை

நாற்கால் பானை – நான்கு கால் தாங்கிகளை உடன் கொண்டிருக்குமாறு அமைக்கப் பெற்ற பானை

பச்சைப் பானை – சுடப்பெறாத பானை

படரப்பானை – அகற்ற – பெரிய பானை

பிணப் பானை – சவப்பானை, ஈமத்தாழி

பொள்ளற் பானை – துளையுள்ள பானை ( பொள்ளல் பானை)



# தனியார் பால் நிறுவனங்களுக்கு சவால் விடும்

## பால்வளத்துறை அமைச்சர் ராஜேந்திர பாலாஜி

சென்னையில் தனியார் பால் விற்பனை தற்போது 25 சதவீதம் சரிந்துள்ளது. அமைச்சர் ராஜேந்திர பாலாஜி கடந்த சில நாட்களாக தனியார் பால் நிறுவனங்களை வளைத்து வளைத்து குற்றம்சாட்டி வருகிறார். தனியர் பாலில் ரசாயனம் கலக்கப்படுவதாக கூறிய அவர், இதனால் குழந்தைகளுக்கு புற்றுநோய் ஏற்படுவதாகவும், தனியார் பால் பாக்கெட்டுகள் 10 நாட்கள் வரை கெட்டுப்போகாமல் இருக்க ரசாயனங்கள் கலக்கப்படுவதாகவும் குற்றம்சாட்டி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றுள்ளார்.

மேலும் அமைச்சர் குற்றச்சாட்டிக் கூறுகையில் "நாம் பாலை தயிராக்குகிறோம் ஆனால் தனியார் பால் நிறுவனங்கள் தயிரையே பாலாக்குகிறார்கள்" என்றார். 100 சதவீதம் தனியர் நிறுவனங்கள் பாலில் வேதிப்பொருளை கலக்கின்றன. இவை மாநில அரசின் லேப்களில் ஆய்வு செய்யப்பட்டு முன்னோடி மருத்துவர்களைக் கொண்டு உறுதி செய்யப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்தார்.

கமிஷனுக்காக பால் முகவர்கள் கலப்படத்தை கண்டுகொள்ளாமல் இருப்பதாகவும் குற்றம் சாட்டிய அமைச்சர் ராஜேந்திர பாலாஜி, தனியார் பாலை சோதனைக்காக மத்திய அரசின் கீழ் இயங்கும் லேப்களில் சோதனை செய்வதற்காக மைசூர், பெங்களூர் உள்ளிட்ட இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் ஆய்வு முடிவுக்குப் பிறகு கலப்படம் செய்யும் பால் நிறுவனங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிர வைத்துள்ளார்.

"தனியார் நிறுவனங்கள் பாலில் வேதிப்பொருட்களை கலக்கவில்லை என்பதை நிரூபித்தால் பதவியை ராஜினாமா செய்யத் தயார், ஏன் தூக்கில் தொங்கவும் தயார்" என்று பால்வளத்துறை அமைச்சர் ராஜேந்திர பாலாஜி சவால் விட்டிருப்பதைக் கண்டு மக்கள் சபாஷ் போடுகிறார்கள்!

மேலும் அமைச்சர் கூறுகையில், "நான் அவர்களிடம் காசு வாங்கியதாக என் மீது குற்றம் சாட்டு கிறார்கள். நான் எந்தத் தனியார் பால் நிறுவனத்துடனும் தொலைபேசியில் பேசவில்லை, குழந்தைகள் குடிக்கும் பாலில் அவர்கள் கலப்படம் செய்கிறார்கள். அவர்களிடம் காசு வாங்கினால் அது மனிதக் கழிவு சாப்பிடுவதற்கு சமம்" என்றார்.

**உயர்நீதிமன்றத்தில் வழக்கு**

பால் கலப்பட விவகாரத்தில், சிபிஐ விசாரணை நடத்த உத்தரவிடக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் 2.6.2017 வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்கு தொடர்ந்துள்ளதை அமைச்சர் ராஜேந்திர பாலாஜி வரவேற்றுள்ளார். பால் கலப்பட விவகாரத்தில் சிபிஐ விசாரணை நடத்த உத்தரவிடக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் சூர்யபிரகாசம் என்பவர் வழக்குத் தொடர்ந்துள்ளார். அதில், "பாலில் ரசாயனம் கலப்பதாக தமிழக அரசு கூறுவது அதிர்ச்சியளிக்கிறது. பாலில் ரசாயனம் கலப்பது தெரிந்தால் தமிழக அரசு உடனே தடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும். பாலில் கலப்படம் செய்பவர்களுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும். இது தொடர்பாக சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது. இந்த மனு மீண்டும் விசாரணைக்கு வரும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 124 N.T.R Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**

# கவிபாஸ்கர்

## புதிய நூல்கள் விற்பனைக்கு




**நூல்கள்**

**காற்றில் மிதந்து வருகிறார் கண்ணதாசன் (கட்டுரைகள்)**
பக்கம்: 176
விலை: ரூ. 150/-

**வணக்கம் தோழர் (கவிதைகள்)**
பக்கம்: 80
விலை: ரூ.65/-

**போர்த்தொழில் (பாவரங்கக் கவிதைகள்)**
பக்கம்: 112
விலை: ரூ 75/-

**கூட்டாஞ்சோறு (கவிதைகள்)**
பக்கம்: 120
விலை: ரூ. 100/-

நூல்கள் & குறுந்தகடுகள் மொத்த விலை ரூ. 575/—

**25% கழிவில் மொத்தத் தொகுப்பு ரூ. 430/-**

**குறுந்தகடுகள்** (பாடல்கள்)

**பனைமரக்காற்று**
(ஈழப்பாடல்கள்)
விலை: ரூ60/-

**நெருப்பின் குரல்**
(ஈகியர் பாடல்கள்)
விலை:ரூ. 60/-

**உயிரெழுத்து**
(குழந்தைப் பாடல்கள்)
விலை: ரூ.60/-




புல்லாங்குழல் வெளியீடு

தொடர்புக்கு: 98416 04017 / 90471 62164 / 044 24742 911

MUTRAM - Tamil & English Monthly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month

